# திராவிடநாடு

2 அணா

## நீ வாழ்வாய்!

[ வாணிதாசன் ]

தமிழ் தாழ நீ தாழ்ந்தாய் தம்பி!—கன்னித்
தமிழ் வாழ நீ வாழ்வாய் தம்பி! தம்பி!

இமியும் கலங்காதே எதிர்ப்புக்கோ அஞ்சாதே
இன்தமிழ் ஏற்றமே உன்னாட்டின் ஏற்றமாம்!

மொழிவாழ இனம்வாழும்; இனம்வாழ நாடுவாழும்;
முத்தமிழ்ப் பெருநாட்டின் பொற்காலம் நினைத்துப்பார்.
அழிவேற்ற தேன்எதனா லென்றே சிந்தித்தால்
அடைவோம் நாம்திருநாட்டை நமக்குள்நாம் மனம்ஒத்தால்.

காந்தளூர்ச் சாலையில் கனவெற்றி பெற்றதுண்டு
கடலினைத் தாண்டிப்போய் வாகை சூடியதுண்டு
சோர்ந்தவர் அல்லநாம் சூரப்புலிக் கூட்டம்!
தூக்கம் தெளிந்தாலிங்கே நிற்குமோ நரிக்கூட்டம்!

# “ராஜாவும், ரோஜாவும்!”

கேள்வி கேட்பவர்கள் எக்கட்சியிலும் கிடையாது, நாட்டிலும் கிடையாது என்ற எண்ணமோ என்னவோ நமது முதலமைச்சர் காமராஜர், ‘நவராத்திரி’ விழா பார்க்கச் சென்றிருந்தபோது, பெங்களூர் நகரிலே பேசியிருக்கிறார்.

**ரோஜா மாலையல்லவாம் — உதாரணத்தோடு குறிப்பிடுகிறார்-மந்திரிப் பதவியை ரோஜா மாலையென்று கருதவேண்டாமாம்!!**

**சுகமாகக் காலம் தள்ளமுடியும் — என்று நினைக்காதீர்கள், மந்திரியாகிவிட்டால்.**

**சாதாரணமானவர்களுக்குள்ள சுதந்திரம் கூடக் கிடைக்காது.**

**எத்தனையெத்தனை விதமான கட்டுப்பாடுகள். இருக்கின்றன தெரியுமா?**

“அம்மா! சாக்லேட், சாக்லேட்” என்று அழும் குழந்தைகளை அடக்க விரும்பும் தாய், “ஏப்பா! சாக்லேட் தின்றால், பூதம் வரும்—அது கடிக்கும்—அப்புறம்...” என்று பயமுறுத்துவதுண்டல்லவா, அதுபோன்ற பாசம் தொனிக்க, அங்கு கூடியிருந்தோருக்குத் தெரிவித்திருக்கிறார்.

ரோஜா மாலையல்லவாம், மந்திரிப் பதவி! யார் சொன்னார்கள் காமராஜருக்கு, ரோஜாமாலை என்று! சொகுசாகப் பவனி வரலாம், மந்திரியாகிவிட்டால்! அவர்களுக்கு எவ்வித வேலையுமே கிடையாது—மாதா மாதம் சம்பளம் கிடைக்கும், கார் உண்டு, கட்டளை பிறப்பித்தால் நிறைவேற்ற அதிகாரிகளிருப்பார்கள், போலீஸ் பவனி வரும், மாளிகையில் வாழலாம் என்று இத்தனை நாளும் எண்ணியிருந்தாரா காமராஜ்? என்று கேட்கத் தோன்றும். ஏனெனில், அவர் பேசுகிறார் அப்படி-

**சுகமாகக் காலம் தள்ளமுடியாது.**

**சுதந்திரமாக உலவமுடியாது.**

**கட்டுப்பாடுக்குள் அடங்கியிருக்கவேண்டும்.**

திறந்து விடப்பட்ட காளையைப்போல உலவவோ, வில்லிலிருந்து கிளம்பிய அம்பைப்போல அட்டகாசம் செய்யவோ, மாடிவீட்டு ‘மைனராக’ காலம் கழிக்கவோ, மக்கள், இவர்களெல்லாம் மந்திரிகளாக வரவேண்டும் என்று கருதவில்லை — நாட்டைப் பரிபாலிப்பார்கள், நல்லது செய்வார்கள், ஏழையின் கண்ணீர் துடைக்கப்படும் என்பதற்காகத்தான் இவர்களை மந்திரிகளாக்கிப் பார்க்க விரும்புகிறார்கள். ஆனால், முதலமைச்சர், ‘ரோஜா மாலைகளைப் போட்டுக்கொண்டு, சுகமாகக் காலம் தள்ளி, கட்டுப்பாடுகள் எதற்கும் அடங்காதபடி’ வாழலாம் என்று, மந்திரியாகுமுன் நினைத்திருந்தவர் போலவும், பதினெட்டு மாதங்கள் பரிபாலனம் செய்ததால் இந்த உண்மைகளை அறிந்துகொண்டவர்போலவும் பேசுகிறார். அப்படி அவர் எண்ணியிருந்து இந்தப் பதவியை எட்டிப் பிடித்தாரெனின், அதைவிட ஆச்சரியமானதோர் செய்தி வேறில்லை என்போம்.

வெள்ளைக்காரனை விரட்டிவிட்டு, ‘சுயராஜ்ய பவனம்’ சோபிதமுள்ளதாக ஆக்கப்பட்டதும், காங்கிரஸ் கூடாரத்தில் இப்படிப்பட்ட பதவிகள் மீது பற்றும் பாசமும் வைப்பதென்பது அதிகமாகிவிட்டது. அவன் வரும்போது நான் ஏன் மந்திரியாகக் கூடாது—அவனுக்கு நான் என்ன மட்டமோ-எனும், சிக்கலும் சீற்றமும் மிக மிக அதிகமாகிவிட்டது. அதனாலேயே, காங்கிரஸ் ஆட்சி நடாத்தும் ஒவ்வொரு மாகாணங்களிலும் எரிச்சல்களும் குடுமிபிடிச் சண்டைகளும் கோலோச்சுகின்றன. அவைகளைப் பார்க்கும்போது, சாதாரண காங்கிரஸ்வாதிகள் அல்ல-அமைச்சர் பொறுப்புகளை வகிக்கிறவர்களே, இப்படிப் பேச ஆரம்பிக்கிறார்கள்-குழந்தைகளைப் பயமுறுத்தும் தாயைப்போல. அன்பர் காமராஜ், இவ்வித கருத்துக்களை அள்ளிச் சொரிந்த இடமும், காங்கிரஸ்காரர்கள் மத்தியில்தான்!

**ரோஜா மாலையல்ல**

**சுகம் கிடையாது**

**கட்டுப்பாடுகள் உண்டு**

இத்தனையும், தனக்குப் பெரியதோர் பாரமாகயிருக்கிறது—மந்திரிப் பதவியால் மன நிம்மதி இல்லை—ரோஜா மாலையாக இல்லை; முள்போலக் குடைகிறது, குத்துகிறது—செச்சே! ஏனிந்தத் தொல்லை? என்று காமராஜருக்கு, கஷ்டமாக இருந்தால், ஒரு விநாடியில் உதறிவிட்டு வந்துவிடுவார்! ஆம், உறுதியாகவே சொல்லுகிறோம், அவர் உதறிவிட்டு வந்துவிடுவார்—ஏனெனில், தன்னைப்பற்றி, அவர் மதுரைக் கூட்டமொன்றில் பேசியது கவனமிருக்கிறது, நமக்கு — “எனக்கு எது சரியென்று படுகிறதோ அதன்படி நடப்பேன். என்னைத் தடுக்க யாராலும் முடியாது. இன்னொருத்தருக்காக என் கருத்தை, நான் மாற்றிக்கொள்ளமாட்டேன்” என்பதாக, அவர் பேசியிருக்கிறார். ஆகவே, சுகமில்லை என்று தெரிந்தும், எதேச்சையாக இருக்க முடியவில்லை என்பதனை அறிந்தும், கட்டுப்பாடுகள் கொட்டுகின்றன என்பதைப் புரிந்தும் ஏனின்னும் அவர், அந்தப் பத[illegible]யிலிருக்கிறார்?

புத்தராவது, அரசைத் துறந்து துறவியாகி, பிறகு, போதனைகளைச் செய்ய ஆரம்பித்தார் — இவர்களோ, அரச பீடத்திலிருந்தபடியே ‘புத்தராக’ மாற முயற்சிக்கிறார்கள். அந்தப் போதனைகளுக்குப் பின்னால் பொதிந்துகிடக்கும் ‘உண்மையினை’ அறியும்போது, ஒவ்வொருவனும் சிரிக்கிறான்! வயிறு குலுங்க சிரிக்க வேண்டியவனாகிறான்!!

அன்பர் காமராஜ் பேசியதுபோல, இங்கிலாந்திலோ, அமெரிக்காவிலோ, —ஒரு அமைச்சர் பேசியிருந்தால், கேலி செய்திருப்பார்கள் மக்கள்! இந்தப் பாலபாடங்கூட அறியாதவர்களா நாங்கள்?—என்று கேட்டிருப்பார்கள்!

இங்குதான், இப்படிப் பேசுவோரைக் காணமுடிகிறது — அமைச்சர் பதவியைவிட்டு விலகிய பின்பு அல்ல, அதிலிருந்துகொண்டே இப்படிப் பேசுகிறார்கள்! அதுதான், எல்லாவற்றையும்விட ஆச்சரியமானது.

★

## பெயரிடல்

திருவண்ணாமலை எஸ். ஆர். எம். யு. செயலாளர் தோழர் சி. குப்புசாமியின் பெண் குழந்தைக்கு, அண்ணாதுரை, “தமிழ்ச் செல்வி” எனும் பெயரிட்டார்.

## திருமணம்

திருப்பத்தூர் தி. மு. க. செயற்குழு உறுப்பினர் தோழர் A. R. தனராமன், தோழியர் உருக்குமணியை 31—10—55ல், வேலூர் மாவட்ட பதிவாளர் முன்னிலையில், பதிவுத் திருமணம் செய்துகொண்டார்.

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 6-11-55 [இதழ் 18

# 'அந்தஸ்துக்காக!'

"என்னப்பா, இப்படிச் செலவு செய்கிறாய்! நாளைக்குக் கையில் காசில்லையென்றால், என்ன செய்வாய்? இருக்கிற சொத்தைக் காட்டி ஏராளமாகக் கடன் வாங்குகிறாயாமே! கடனையும் வாங்கி, கண்டவர்களுக்கு அல்லவா செலவழிக்கிறாயாம்? தகுமா இது? அடுக்குமா தம்பி?" என்று ஊதாரியைப் பார்த்து, ஊரிலேயிருக்கும் நல்லவர்கள் கேட்டால், "என்னங்க, என்னுடைய அந்தஸ்துக்கு நான் என்ன செய்வேன்? கந்தப்பன் நூறு ரூபாய் கேட்டான்; முனியப்பன் முன்னூறு தேவை என்றான்–கந்தப்பனும் முனியப்பனும் யார்? பரம்பரை பரம்பரையாக என்னைவிட அந்தஸ்தில் குறைந்தவர்கள். அவர்கள் கேட்கும் போது, கொடுக்காமலிருக்கமுடியுமா? அதற்குத்தான், மாடி வீட்டு மாப்பிள்ளைச் செட்டியாரிடம் கடன் வாங்கிக் கொடுத்தேன்" என்று அந்த வாலிபன், தன்னுடைய செயலுக்கு விளக்கம் வேறு கூற முனைந்தால், என்னவென்று கருதுவீர்கள் அவனை? வெளியிலிருப்போர், தன்னுடைய அந்தஸ்தைப்பற்றி தவறாகக் கருதிவிடக்கூடாதென்று, கடன் வாங்கி, 'கன்னா பின்னா'வெனச் செலவிடும் அதே சமயத்தில், அவனுடைய வீட்டில் 'விசாரப்படும் மனைவி, விளக்கெரிக்க எண்ணெயில்லையே என்றழும் தாய், பள்ளிக்கூடத்துக்குச் சம்பளப் பணம் கட்டவில்லையென்று அழும் குழந்தை, உடலைப் போர்த்திக்கொள்ள ஒரு துப்பட்டி இல்லையேடா தம்பி எனக் குமுறும் தந்தை, என்பது நிலைமையென்றால் — அந்த வாலிபனைக் குறித்து என்ன நினைப்பீர்கள்? ஊரார்தான் என்ன சொல்வார்கள்—"போகிறான் பார்! ஆகா, அவனுடைய அந்தஸ்து என்ன தெரியுமா? முனியப்பனுக்கு ரூபாய் முன்னூறு கொடுத்தான்; கந்தப்பனுக்கு ரூபாய் நூறு கொடுத்தான். அவ்வளவு பெரிய அந்தஸ்து உள்ளவன்" என்று மகிழ்வார்களா, அல்லது "ஊதாரி! உதவாக்கரை! குடும்பம் நடத்தத் தெரியாது! வீண் ஆடம்பரக்காரன்! வெத்துவேட்டு! இருப்பதைக் கரைக்கும் ஏமாளி"— என்று ஏசிப் பேசுவார்களா?

இதனை அறியாதவராக இருக்கமுடியாது, அவர். ஆனாலும் சொல்லுகிறார், அந்தஸ்துக்காக அந்தக் காரியம் செய்யப்பட்டதாம்.

இந்தியா இப்போதுள்ள அந்தஸ்தை உத்தேசித்து, அந்தக் காரியம் செய்ய முன்வந்தார்களாம்.

வெறும் கடன் வாங்கும் நாடாக மட்டும் இருக்கலாமா! மதிப்புக்குப் பொருந்துமா? அதனால்தான் அந்தக் காரியம் செய்தோம்!— என்று அறிவிக்கிறார், தேஷ்முக்.

"இருபது கோடி ரூபாய், எதற்காக இந்தியா கொடுப்பது? இங்குதான் முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் முதலியவைகளுக்குப் பணம் தேவைப்படுகிறதே, இந்த நிலைமையில் இருபது கோடி ரூபாயை எதற்காகக் கொடுப்பது பர்மாவுக்கு? கடன் வாங்கிச் செலவழிக்கும் நாம், இன்னொரு நாட்டுக்குக் கடன் கொடுப்பது விந்தையாக இல்லையா?" என்று, நம்மைச் சேர்ந்தவரல்ல — ஒரு நிருபர்—புது டில்லியில், நிதியமைச்சர் தேஷ்முக்கைப் பார்த்துக் கேட்டிருக்கிறார். அதற்குத்தான், அமைச்சர், "நாம் கடன் வாங்குவது வேறு வகை; கடன் கொடுப்பது வேறு வகை...இந்தியா இப்போது அடைந்துள்ள அந்தஸ்தை உத்தேசித்து வெறும் கடன் வாங்கும் நாடாக இருப்பது அதன் மதிப்புக்குப் பொருந்தாது" என்று பதிலளித்திருக்கிறார்.


இந்தியா அந்தஸ்து அடைந்திருக்கிறதாம், இப்போது! — 'அந்தஸ்தை' அளக்க, அன்பர் தேஷ்முக் வைத்திருக்கும் அளவுகோல் என்னவென்று தெரியவில்லை. அந்தஸ்து அடைந்துவிட்டதாம்! அதுவும் இப்போது! எதை அந்தஸ்து என்று குறிப்பிடுகிறார், அவர்? நேரு, ரஷ்யாவுக்குப் போய் வருவதையா? இல்லை, புல்கானின் போன்றோர் இந்தியாவுக்கு 'விஜயம்' செய்வதையா? எது அவர் குறிப்பிடும் அந்தஸ்து? ஆண்டுகள் எட்டாகிவிட்டன, அவர்கள் ஆட்சிப் பீடம் ஏறி! அகதிகளின் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை; ஆண்டுதோறும் கோடி கோடி ரூபாயை விழுங்கிக்கொண்டிருக்கிறது. காஷ்மீர் பிரச்னை, பணமும் மானமும் காலாவதியானதுதான் மிச்சமே தவிர இன்னும் ஒரு முடிவேற்படவில்லை — ஆபிரிக்காவின் நிறவெறிப் பிரச்னையை ஐ. நா. சபை இருந்தும் இன்னும் ஒரு முடிவுக்குக் கொண்டுவரவில்லை—சின்னஞ்சிறு கோவா, சிரிக்கிறான் சலாசர் இவர்களைப் பார்த்து; பத்து ஆண்டு ஆறாண்டு என்று சிறைக்குள் பூட்டுகிறான் விடுதலை வீரர்களை, பிடி சாம்பல் அனுப்புகிறான் — எனினும், இப்போது அந்தஸ்து உயர்ந்துவிட்டதாம், வெளி உலகில், இந்தியாவுக்கு! இதோ இருக்கும் இலங்கை, திண்டாடித் தவிக்கச் செய்கிறது, தமிழர்களை —'அடிக்கடி' கூடிப் பேசுவதாகச் செய்திகள் வருகின்றனவே ஒழிய அவதியும் வேதனையும் குறைந்தபாடில்லை—இந்த நிலையில், அமைச்சர் கூறுகிறார், அந்தஸ்து உயர்ந்திருக்கிறதாம், இப்போது! அதனால், வெளியாருக்குக் கடன் கொடுக்கவேண்டுமாம்! உலக மேடையில்தான், இது நிலைமையென்றால், உள்நாட்டு நிர்வாகத்தில் என்ன 'அந்தஸ்து' உயர்ந்திருக்கிறது? ஒவ்வொரு மாதமும், கணக்கு பரிசீலனை கமிட்டி வெளியிடும் ஊழல்கள் விதவிதமாகவன்றோ உள்ளன. சோடேபூர் கண்ணாடித் தொழிற்சாலை — ஆயுதச் சாலைக்காக ஐந்து கோடி நஷ்டம், அத்தனையும் வீண்—அணைக்கட்டுகளிலே ஊழல்—பத்ம விபூஷண் பட்டம் பெற்றவரே இலஞ்சம் வாங்குதல்—இதுதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதனை, ஆளும் மகிபர்களும் மறுக்கிறார்களா என்றால், கொஞ்சம் சங்கடத்துடன் ஒப்புக்கொள்ளவே செய்கிறார்கள்–இருந்தும், நிதியமைச்சர் சொல்கிறார், அந்தஸ்து உயர்ந்துவிட்டதாம் இப்போது! ஆகவே, இருபது கோடி ரூபாய் கடன் கொடுக்கவேண்டியதுதானாம், பர்மாவுக்கு!!

இது தவிர, நாட்டின் 'அந்தஸ்து' உயரும் வகையில, பசித் துயரைப் போக்கிவிட்டனரா — பஞ்சத்தை விரட்டியாய் விட்டதா — ஏழைகளின் கண்ணீர் துடைக்கப்பட்டுவிட்டதா— இல்லாமையை ஒழித்தாயிற்றா–வேலையில்லாத் திண்டாட்டம் அழிக்கப்பட்டாயிற்றா—என்று கேட்டால், இப்போதுதானே, செய்துகொண்டிருக்கிறோம், படிப்படியாக! என்று தெரிவிக்கிறார்கள்.

எந்த மாகாணத்திலும், அதிருப்தியே நிலவுகிறது–டில்லியைப் பணம் கேட்டோம் கொடுக்கவில்லை! கொடுக்கவில்லை!! என்றே குறை கூறுகிறார்கள். திட்டக் கமிஷன் சார்பில் பொறுப்பு வகிக்கும் குல்சாரிலால் நந்தா, எனும் அமைச்சரோ, அதிகவரிபோடநேரலாம்! ரூபாய் 700 கோடிக்குமேல் தேவைப்படுகிறது! என்று எச்சரிக்கை விடுத்த வண்ணம் இருக்கிறார்—இருந்தும், கடன் கொடுக்கவேண்டுமாம் இன்னொரு நாட்டுக்கு! அப்போதுதான், அந்தஸ்தை நிலை நாட்டிக் கொள்ள முடியுமாம்!!

அந்தஸ்து! கௌரவம்!. — எனும் பெயர்களால், வெள்ளையாட்சியினர் விரயம் செய்த பணம் ஏராளம்; அதற்காக அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட சம்பிரதாயங்களும், தாசர்கள் கூட்டமும், அதிகம். அப்போதெல்லாம், கேலியும், கண்டனமும் கிளப்பியவர்கள், இதே காங்கிரஸ்காரர்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது— ஏனய்யா, வைஸ்ராய்? என்று கேட்டார்கள் — வைஸ்ராய் வருவதற்காக

(16-ம் பக்கம் பார்க்க)



# போலீஸ்! போலீஸ்!

## (2)

**தம்பி,**

**பச்சை மாமலைகள்!**
**பரங்கான காட்சிகள்!**
**பாடும் அருவி!**
**பயமற்ற மிருகங்கள்!**
**ஓங்கி வளர்ந்த மரங்கள்!**
**தேயிலைத் தோட்டங்கள்!**
**முக்கனி குலுங்கும்**
**பழத் தோட்டங்கள்!!**
**தேக்கங்கள்!**
**தேனூறுகள்!!**

தமிழகம் தந்திடும் எழிலோவியங்களைக் கண்டு, என்னை மறந்து கிடந்ததால், சென்றகிழமை உன்னுடன் 'அளவளாவும்' வாய்ப்பினைப் பெற்றேனில்லை. மலைவளமும், காட்டுவளமும், கானாறுகளும் களிறுகளும், மான்கூட்டமும், மலர்த்தோட்டமும், புரண்டோடும் பேராறுகளும், கெம்பீரமாகக் காணப்பட்ட நீர்நிலைகளும், சிந்துபாடிடும் சிங்காரச் சிற்றருவிகளும், வாளை துள்ளிடும் வாவிகள், கெண்டை புரண்டிடும் ஆறுகள், பொன்பூத்திடும் வயல்கள்,—தம்பி!—கண்ட காட்சிகள், எதைக் கூறுவேன், எப்படிக் கூறினால், எழிலை விளக்கிடமுடியும்! கண்கண்டது—கருத்தில் நின்றது—கவி அல்ல பாடிக் காட்ட, ஓவியனல்ல தீட்டித்தர!! அத்தகைய காட்சிகளை, 3500 அடி உயரம் ஏறிச் சென்று கண்டிடும் வாய்ப்புப் பெற்றேன் சென்றகிழமை! சென்றது, மாநில மாநாட்டுக்கான நிதிபெற! கண்டது தமிழருக்கு இயற்கை அளித்துள்ள பெருநிதியை!!

பாண்டி மண்டலத்தில் பல்வேறு இடங்களில் சென்று பற்றும் பரிவும், பாசம் கொள்ளத்தக்க வகையிலே வழங்கிடும் தோழர்களைப் பெருமளவில் கண்டு மகிழ்ந்து விட்டு, பாண்டி நாட்டுடன் ஒட்டிக் கிடப்பினும் அரசியல் நிர்வாகக் கரத்தின் கொடுமையினால் வெட்டுண்டு கிடக்கும் பீர்மேடு தாலூக்காவிலுள்ள வண்டிப்பெரியாறு எனும் இடம் சென்று, அங்கு அரும்பாடுபட்டு, நமது அகம் மகிழும் வண்ணம் கழகத்தைக் கட்டிக்காத்து வரும் தோழர்களிடம் அளவளாவி மகிழ்ந்தேன்.

போலீஸ்! போலீஸ்!! என்ற கூக்குரலை, நான் அங்கு செல்வதற்கு ஒரு கிழமைக்கு முன்பிருந்தே, ஆங்குள்ள சிலர் கிளப்பினராம்! தந்திகள் பறந்தனவாம், தடை உத்தரவு பிறப்பிக்கச் சொல்லி! கூட்டம் நடத்த அனுமதி தரக்கூடாது — குழப்பம் விளையும்—கொந்தளிப்பு மூண்டுவிடும் என்று கூறினராம் மலையாள நண்பர்கள்! பாவம்! அவர்கள் மருட்சி அடைந்துள்ளனர்! வண்டிப்பெரியாறு கூட்டம், தேவிகுளம், பீர்மேடு தாலுக்காக்களின் மீது தமிழரின் 'படை எடுப்பு'க்கான ஏற்பாடு என்ற அச்சத்தில், மலையாளத் தோழர்கள் திருவிதாங்கூர் சர்க்காருக்குத் 'தந்திகள்' கொடுத்திருந்தனர். எனினும் 'பனம்பள்ளி' சர்க்கார் பதட்டம் கொள்ளவில்லை; கூட்டம் நடைபெற்றது; மலையாளத் தோழர்களுக்கு 'விளக்கம்' தரும் வேலையை ஓரளவுக்குச் செம்மையாகவே செய்து முடித்தேன்.

தம்பி! தேவிகுளம் பீர்மேடு வட்டாரத்திலே காணப்படும், மலைவளமும், காட்டுவளமும் உண்மையிலேயே, திருவிதாங்கூர் சர்க்கார் திகில்கொண்டு, தீப்பட்ட குழந்தை போல், துடிதுடித்துக் கதறச் செய்யும், வகையில்தான் அமைந்திருக்கிறது!

ஏலமும், தேயிலையும், வாழையும் வகை வகையான பயன்தரும் தருக்களும், கானகக்காட்சியாக இருக்கிறது எங்கும்! அதோ ஓர் மேகக் கூட்டம்—வெண்மை நிறத்துடன்—மறு விநாடி பழுப்பேறுகிறது—மெள்ள மெள்ள அணிபணி பூண்ட ஆரணங்கு, 'ஜடை' பாரம் தாங்காமல், இடை துவள நடை பயிலும் அழகுடன் உலவுகிறது — உள்ளத்தைச் சிலிர்த்திடச்செய்யும் ஓர் மென் காற்று வீசுகிறது—உடனே கருமுகில் ஆகிவிடுகிறது — சூல் கொண்ட மேகம், மழை முத்துக்களை உதிர்த்திட, அவைதமை ஏற்றுத் தாலாட்டுகின்றன, தருக்களும் செடிகொடிகளும்!

தம்பி! ஓங்கி வளர்ந்திடும் மரங்களும், பலன் பல தரும் தருக்களும் இங்கேயும்தான் காண்கிறோம், மலைமேலும்தான் உள்ளன—ஆனால், மகத்தானதோர் வித்யாசம் இருந்திடக் காண்கிறோம். கடிமணம் புரிந்தவன் காதலைச் சொரிந்தும் கன்னல் மொழியை வழங்கியும், இன்ப வாழ்வு நடத்திடுவதால், எழில் குலுங்கிடக் காட்சி தரும் ஏந்திழையின் முகத்திலே காணப்படும், விளக்கொணாததோர் 'தகத்தகாயம்' இந்தத் தருக்களிலும் செடிகொடிகளிலும், புல் பூண்டு, உதிர்ந்து கிடக்கும் சருகுகளிலும் கூடக் காண்கிறேன். இங்கே, நாம் எப்போதும் காணும் தருக்களிடம், கடமை தவறாத கணவனின் பராமரிப்பிலே இருக்கும் பாவையரிடம் காணப்படும், பொறுப்பு தெரிகிறது; அங்கு தம்பி! கண்ணாளன் பொழிந்திடும் காதலால் காரிகை கொண்டிடும் 'பொலிவு' தெரிகிறது இலையில், மலரில், செடியில், கொடியில்!!

(13-ம் பக்கம் பார்க்க)

# இருளில் ஒளி

**சி.என்.அண்ணாத்துரை**

**மன்னர்கள்** மணிமுடிகளுக்காகவும், சீமான்கள் மதுநிகர் வாழ்வுக்காகவும், போரிட்ட பகுதிகளே பெரிதும் வரலாற்றிலே இடம்பிடித்துக்கொள்கின்றன — ஏழை எளியவருக்கு உலகிலே எங்ஙனம் ஒதுக்கிடம் தரப்படுகிறதோ, அது போன்றே வரலாறும் அவர்களை அதிகம் கவனிப்பதில்லை. கீர்த்திமிக்க மன்னர்கள், அவர்கள் நடாத்திய வீரப் போராட்டங்கள், பிடித்த கோட்டைகள், வெட்டிய அகழிகள், அழித்த நகரங்கள், கட்டிப்பிடித்து வந்த கைதிகள், வெட்டிக் குவித்த எதிரிகள், அவர்கள் வீசிய வாட்களின் கூர்மை, வாட்கண்ணாரிடம் அவர்கள் பணிந்த காட்சிகள், அரண்மனைச் சதிகள், அவைகளின் விளைவுகளான படுகொலைகள், பட்டமும் பதவியும் பெற்ற சீமான்கள் பாடும் பராக்கு, அவை பெருதார்க்கும் பகை—இவைகளை விரிவும் விளக்கமும், சுவையும் கலந்ததாக்கித் தருவதையே வரலாற்றாசிரியர்கள் நெடுங்காலம் முறையாகக் கொண்டனர். எந்தக் கோலாகலத்துக்கும் அடிப்படை தரும், மக்களின் எழுச்சி வீழ்ச்சிபற்றியும், வீரப் போரிட்டு வெற்றிபெற்றது குறித்தும், இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில காணக் கிடக்கும் — எனினும், அரண்மனையும் மாளிகையும், களமும் கொலுமண்டபமும், வரலாற்றைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டதால், ஏழையின் கண்ணீரும் பெருமூச்சும் அதிலே இடம் பெற முடியவில்லை. மாடியில் உலவும் முல்லை சூடியமங்கையின் எழிலைக் காண்போருக்கு, அந்தக் கன்னி வாழும் கட்டடத்தின் அடிப்படையின் ஆழம் அமைப்புபற்றி எண்ணிட நேரம் தான் கிடைக்குமா!

மேலும், துதிபாடகர்களும், புகழ் பரப்பும் புலவரும், வரலாற்றுச் சுவடிகளைத் தொகுத்தளிக்கும் பணியினை மேற்கொண்டனர்-துவக்கத்தில். எனவே அவர்கள் படை அஞ்சப் போரிடும் மன்னனைக் குறித்தும், அவன் மனம் உருக ஆடிடும் துடியிடைபற்றியுமே தீட்டிக் காட்டினர். எனினும், இன்றுபோல் என்றும் மக்கள் இருந்து வந்தனர், உழைத்த வண்ணம் உருமாறிய வண்ணம், கண்ணீர் பொழிந்தபடி, பெரு மூச்சுடன். அடிமைகள் இருந்து வந்தனர், எடுபிடிகள் இருந்தனர், உழவர் உழன்று வந்தனர், தொழில் செய்வோர் பாடுபட்டு வந்தனர்—எது செய்து வாழ்வது என்று தெரியாது திகைத்து அலைந்து கொண்டிருந்தவர்களும், இருந்து வந்தனர். அவர்களின் மனப்போர், மண்டிலம் ஆண்ட மன்னர்கள் நடாத்திய போர்களைவிட அதிகம் —ஆனால் வெளியே தெரியாது— வாழ்வுக்காக அவர்கள் நடத்திய போரும் பல, ஆனால் வரலாற்றிலே அவைகட்குப் போதிய இடம்தரப்படவில்லை. மக்களின் சார்பாகப் பாடுபடும் மாண்பு வளர்ந்துள்ள இதுபோதுதான், வரலாற்றினைப் புதுப்பித்து, மக்களை முன்னால் வைத்து, சம்பவங்களைத் தொகுத்திடும் முறை ஓரளவுக்கு வளருகிறது—வளரவேண்டிய அளவு அதிகமிருக்கிறது.

ஏழையின் மனதிலே நெடுங்காலமாக உருவாகிக் கொண்டு வரும் கோபம், எரிமலை நெருப்பைக் கக்குவதுபோலச் சிலவேளைகளில் புரட்சிகளாக மாறின — ஆனால், தெளிவான திட்டம் கிடையாது— கொள்கை வளரவில்லை — வேறு வழி இல்லைஎன்றானபோது, வெட்டு குத்து என்றனர்—வெட்டப்பட்டனர் — மாண்டவர் போக மீதமிருந்தோர், மீண்டும் செக்கு மாடுகளாக்கப்பட்டனர்.

உழைப்பாளிகளின் மனக் குமுறல், வெடித்த சம்பவங்கள், பல நாட்டு வரலாறுகளிலே சிற்சில காணப்படும்—ஆனால் அவைகள், மகா அலெக்சாந்தரின் வெற்றிப் படைகள் கிளப்பிய தூசியால், மறைக்கப்பட்டுவிடும். மாவீரன் ஜூலியஸ் சீசரின் வீரவாளின் ஒலி ஏழையின் அழுகுரலை அடக்கிவிடும்—வரலாறு, தன் வழக்கமான பகுதியைக் காட்டி, மக்களின் வரலாற்றை மறைத்துவிடும்.

அடிமைகளாக, பண்ணையாட்களாக, பலவித தொழில்களைச் செய்பவர்களாக, மக்களில் பெரும் பகுதியினர் இருந்தவரையில், அவர்கள் எப்போது கொடுமையை எதிர்க்கக் கிளம்பினாலும், கொள்கை, திட்டம், கூடிச் செயலாற்றுதல், தொடர்ந்து செயலாற்றுதல், என்பனபோன்ற முறையைக் கொள்ளமுடியவில்லை. ஊருக்குள் புகுந்த புலியைக்கொல்ல, அனைவரும், கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டுகிளம்புவதுபோலவேகாரியம் இருந்துவந்தது. தங்களின்நிலை பற்றி எண்ணிப் பார்த்திட, எம்முறையினால் குறையைக் களைந்து

கொள்ளலாம் என்று கூடிக்கலந்து பேசிட, அதற்கான திட்டம் யார் வகுப்பது, யார் திட்டப்படி செயலை நடத்திச் செல்வது என்பனபோன்றவைகளை ஆய்ந்து முடிவுகட்டத் திறமும் வாய்ப்பும், அப்போது இல்லை; திறத்தைவிட வாய்ப்பு இல்லை என்றே கூறவேண்டும்; ஏனெனில், ஏழையின் எழுச்சியிலே ஒரு வலிவு என்றுமே இருக்கத்தான் செய்தது!

இந்த 'முறை', ஏழைக்குக் கிடைக்க, பல நூற்றாண்டுகள் பிடித்தன; இதற்கிடையில், நாடுகளிலே, பல துறைகளிலும், பல்வேறு மாற்றங்கள் நேரிட்டன—மக்கள், வரலாற்று ஆசிரியரின் கண்களுக்குத் தெரியலாயினர்.

கொடுங்கோலனை விரட்டுவது, செங்கோல் அமைப்பது, எவன் எந்த நேரத்தில் கொடுங்கோலனாகி விடுவானோ என்ற அச்சத்தால், உந்தப்பட்டு, அரசாளும் முறையிலேயே மாற்றம் காண்பது, கோனாட்சியைக் குடிக்கோனாட்சியாக மாற்றுவது, ஆட்சி செய்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையே 'தொடர்பு' இருக்க, வழிவகை காணுவது, போன்ற பல மாற்றங்கள் செய்தான பிறகே, மக்களின் பிரச்சினைபற்றிக் கவனிக்கும் சுற்றுச்சார்பு உருவாயிற்று.

ஆட்சிமுறையிலே மட்டுமல்ல, அர்ச்சகர் முறையிலேயும், திடுக்கிடத் தக்க பல மாற்றங்கள் தேவைப்பட்டன. இந்த மாற்றங்கள், இரத்தம் சிந்திப் பெறப்பட்டன. ஒவ்வொரு மாற்றம் ஏற்படும் போதும், கழனியில் உழுவோனும், கல் உடைப்போனும், உடலை வாட்டும் வேலை செய்து பிழைப்போனும், குற்றேவல் செய்வோனும், இனித் தனக்கு 'நல்ல காலம்' பிறக்கும், கஷ்டம் குறையும், நலம் கிடைக்கும், என்றுதான் எண்ணிக்கொண்டார்கள்—ஆனால், நாட்டுக்கு நாயகராக யார் வந்தாலும், அரசாளும் முறையிலே என்னென்ன மாறுதல் ஏற்படினும், ஏழையின் வாழ்விலே ஒரு புது மலர்ச்சி ஏற்படவில்லை; ஏக்கம் அவன் தூக்கத்தைக் கெடுத்துத்தான் வந்தது, உழைப்பு அவன் உடலையும் உள்ளத்தையும் துளைக்கத்தான் செய்தது—அவன் பாதி மனிதனாகத்தான் இருந்தான்.

இருள் நீங்கவில்லை! சிற்சில சமயத்திலே, இருளிலே ஒளி தரும் சம்பவம் தோன்றும், மறையும்—ஒளி தர வேண்டுமென்ற உயர்ந்த எண்ணம்படைத்தவர் ஒருவரிருவர் முன் வருவர்—அவர்களால் இருளை அடியோடு விரட்ட முடியவில்லை, ஆனால், இருளிலே ஒளி எழச் செய்தனர்—ஒளி நிரம்பிய இடமானால், இன்பம் எத்துணை இருக்கும், என்று மக்களை எண்ணிடச் செய்தனர். அவர்களின் பணி, மக்கள் வரலாற்றிலே, மாண்புள்ள பகுதியாகும்.

இங்கிலாந்து நாட்டில், இது போல இருளிலே ஒளி காட்ட முயன்ற ராபர்ட் ஓவன், என்பவரின் சீரிய முயற்சி, மக்கள் வரலாற்றிலே சிறப்பளிக்கும் பகுதியாகும்

வேறுபல நாடுகள் போலவே இங்கிலாந்தும், மன்னர்களின் கோலாகலத்துக்கு உறைவிடமாகத்தான் இருந்தது; ஆனால் அரசியல் முறைகளை மாற்றி அமைக்கும், உரிமைப் போரைத் திறம்பட நடத்தி, வெற்றி கண்டனர். மன்னர் என்றால் மக்களுக்காக ஆட்சி செய்யும் மகத்தான பொறுப்பைத் தாங்கி நிற்கும் சின்னம், என்ற கொள்கை உருவாகி வந்தது.

நாடு, எக்கேடு கெட்டாலும் கவலைப் படாமல், அரண்மனையில் அட்டகாசம் செய்து வந்த மன்னர்கள், அண்ணன் தலையை வெட்டி மணி முடியைப் பறித்துக்கொண்ட முடிதாங்கிகள், அகப்பட்ட அணங்கினை அரண்மனைக்கு அழைத்துச் சென்று, அவள் அளிக்கும் இன்பத்தின் சுவை குறைந்ததும், தலையைச் சீவிவிட்டு, வேறோர் தத்தையை நாடியவர்கள்,—பிரபுக்களுடன் கூடிக் கொண்டு கொட்டமடித்தவர்கள்—அவர்களைப் பகைத்துக் கொண்டு உள்நாட்டுப் போர் நடாத்தியவர்கள் — மதத் தலைவர்களின் ஆசியே ஆட்சிக்கு அரண் என எண்ணியவர்கள், எமக்கு அவர்கள் ஈடா, என்று எதிர்த்துக் கேட்டவர்கள், காரணமற்ற போர் புரிந்தவர்கள், தலை தெறிக்கத் தோற்றோடி வந்தவர்கள்—நல்லவர்கள் கெட்டவர்கள, நயவஞ்சகர்கள், எனும் எல்லா வகையான அரசர்களையும், பல்வேறு வகையான அரச முறைகளையும் நாடு பார்த்தாகி விட்டது. புயல் கிளம்பி, நச்சு மரங்களைச் சாய்த்தன-புதிய நச்சுச் செடி முளைத்திடா வண்ணம், அரசியல் உழவு முறையிலே புதுமாற்றம் காண முயன்றனர்; இந்த நிலையில் நாடு இருந்த போது, மக்களின் வாழ்விலே இருந்து வந்த இருளைப் போக்கும் சீரிய முயற்சியை, ராபர்ட் ஓவன் செய்ய முற்பட்டார்.

ராபர்ட் ஓவன் 1771ம் ஆண்டு பிறந்தார் — எண்பத்தேழாண்டுக் காலம் வாழ்ந்தார்.

இருளில் ஒளி காட்டும் சீரிய முயற்சியில் ராபர்ட் ஓவன் ஈடுபட்டார்—தோற்றார்.

அந்தத் தோல்வி, மக்கள் வரலாற்றிலே புதிய மாண்பளிக்கும் வலுவைத் தந்தது.

களத்திலே பெற்ற வெற்றிகளும், மன்றங்களிலே அரசியல் நுட்பமறிந்தோர் பெற்ற வெற்றிகளும், சாதிக்க முடியாத மாண்பினை, ராபர்ட் ஓவன் தம் தோல்வி மூலமே சாதித்தார். வெற்றி பெற்றிருந்தால்!! உலகமே புத்துருவம் கொண்டிருக்கும்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பாட்டாளி ஒரு கணம் புன்னகை புரிந்தான்! ஓவன் அளித்த ஒளி அவன் மனதிலே புதுப்புது எண்ணம் தந்தது. அவனை, அனைவரும் அடக்கப் பார்த்தனர்—அறிவுரை கூறினர்—பொறுமையின் அருமைபற்றிக் கூறினர் — ராபர்ட் ஓவன், அவனுக்கு மகிழ்வூட்டினார்—நம்பிக்கை எழச் செய்தார்.

ஒரு மன்னனின் தலையைச் சீவி வேறோர் மன்னனை நாட்டைவிட்டு விரட்டி, இங்கிலாந்து நாடு, புயலைக் கிளப்பி, அரசாளும் முறையிலே இருந்துவந்த ஏதேச்சாதிகாரத்தை ஒழித்துக்கட்ட முனைந்தது — ஓரளவு வெற்றியும் பெற்றது—மக்களின் பிரதிநிதிகள் கூடும் மாமன்றம் வகுக்கும் முறைப்படி மன்னன் அரசாள்வது, என்ற நிலை அமைக்கப்பட்டது. அரண்மனையின் அமுலின் அளவும் வகையும் ஒழுங்குபடுத்தப்பட்டது. நாடு புதியதோர் பொலிவு பெற்றது. வெளிநாடுகளிலே, இங்கிலாந்தின் வணிகர்கள் பொன் திரட்டினர்; இங்கிலாந்தின் கொடி தாங்கிய கலங்கள் எல்லாக் கடலிலும் பெருமிதமாகச் சென்றன! உலகத்துக்குப் 'புது நாயகர்' என்ற கீர்த்தியைப் பெறுவதற்கான, முயற்சியில் நாடு ஈடுபட்டிருந்தது. செல்வம் திரண்டது; பரம்பரைச் சீமான்கள் அளவுக்குப் பார்த்துப் பொறாமைப்படும் அளவுக்குப் புதுச் சீமான்கள் கிளம்பினர் — வியாபாரக் கோமான்கள்

சூதாடியும் சுகபோகத்துக்குச் செலவிட்டும் கடனாளியாகிவிட்ட பழய பிரபுக்களின் பண்ணைகளையும் மாளிகைகளையும் விலைகொடுத்து வாங்கி, புதுமெருகு பெற்றனர், நாட்டின் தொழில் வளமும் பெருகிற்று, பாட்டாளி மட்டும், பழைய படியே பெருமூச்செறிந்தபடி தான் இருந்தான். புதுமுறை, அவனுடைய பழைய நோயைப் போக்கவில்லை; போக்காதது மட்டுமல்ல, நோய் வளரலாயிற்று.

தொழில் உலகப் புரட்சி நடைபெற்றது. செல்வம் திரட்டும் சீமான்கள் சிலரும், அவர்களிடம் உழைத்தலுக்கும் ஏழை மக்கள் ஏராளமாகவும் இருந்து வாடும் நிலை ஏற்பட்டது.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இங்கிலாந்துப் பொருள்கள்— சிறப்பாகப் பருத்தி ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. பல்வேறு நாடுகளிலே அமைக்கப்பட்டிருந்த வியாபாரக் கோட்டங்கள்மூலம், பெரும் பொருள் ஈட்டினர், தொழிலதிபர்கள்; தொழிலாளரோ வறுமையில் வாடினர்.

தொழில்களில் இயந்திரக் கருவி பயன்படுத்தப்பட்டதால், உற்பத்தியின் அளவு அதிகப்பட்டது; முதலாளிக்கு இலாபம் குவிந்தது. கைத்தொழிலின்போது தேவைப்பட்ட அளவு தொழிலாளர்கள் தேவைப்படவில்லை; கூலியும் மட்டம்; வேலைமுறையோ, தொழிலாளியைக் கசக்கிப் பிழிவதாக இருந்தது.

ஒரு தொழிலாளி ஒரு நாளெல்லாம், கைத்தொழில் மூலம், சிறு கருவிகளை உபயோகித்து 4800 ஊசிகள் செய்யமுடிந்தது, இயந்திரத் தொழில் முறையின் மூலம், ஒரு இயந்திரத்தில் ஒரு நாளில் 145,000 ஊசிகள் தயாரிக்கப்பட்டன! இந்த அளவு உற்பத்திக்காகக் கைத் தொழில் முறை மூலம் உற்பத்தி செய்வதானால் 125.தொழிலாளர்களைப் பயன்படுத்தி இருக்கவேண்டும்; 125-தொழிலாளர்களுக்குக் கூலி தந்திருக்கவேண்டும்; ஆனால் ஒரு இயந்திரத்தைச் சிலரைக்கொண்டு நடத்தச்செய்து, முதலாளி இலாபமடைகிறான், செல்வம் வளருகிறது, பரம்பரைப் பிரபு, இந்தப் 'பணப் பண்ணை'ச் சீமானிடம், பயப்படக் கூடச் செய்கிறான்,

கைத்தொழில் முறை இருந்த போது, தொழிலாளி, கருவிகளைத் தன் இஷ்டம்போல் உபயோகித்தான், இயந்திரத் தொழில் முறை வந்தபிறகு, தொழிலாளி, இயந்திரத்துக்கு அடிமையாகிறான் — நடமாடும் யந்திரமானான்!

கைத்தொழில் முறை இருந்த போது, கருவிகளைத் திறம்படப் பயன்படுத்தும் ஆற்றல் உள்ளவர்களே தொழில் செய்ய முடிந்தது; இயந்திரத் தொழிலிலோ, பெண்களும், குழந்தைகளும்கூட, வேலை செய்ய முடிந்தது; பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் குறைந்த கூலி கொடுத்தால் போதுமானதாக இருந்தது, எனவே, தொழில் அதிபர்கள், இது கொடுமை என்று எண்ணாமல், குழந்தைகளைக்கடுமையாக வேலைவாங்கினர்: பெட்டியில் இலாபம் குவிந்தால் போதும் என்பதன்றி வேறு அக்கரை என்ன இருக்கமுடியும்.

நூல் நூற்கும் இயந்திரம், நீராவி விசை இயந்திரம், முறுக்கேற்றும் இயந்திரம் போன்ற, பல நூதனக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு, தொழில் தரத்தையும், உற்பத்திப் பெருக்கையும் அதிகமாக்கின. இந்த இயந்திரங்களைக் கண்டுபிடித்தவர்கள், பெரும்பாலும் ஏழையர் உலகினரே! இலட்சக்கணக்கிலே பணம் செலவிட்டு எந்தச் சீமானும் கண்டு பிடித்ததல்ல, தேவாலய நீர் தெளித்து அர்ச்சகர் கண்டு பிடித்ததுமல்ல; பாட்டாளியின் உடலிலே சொட்டும் வியர்வையைக் கண்டு கண்ணீர் சொரிந்தவர்கள், அவனுடைய கஷ்டத்தைக் குறைக்க, கருவிகள் பயன்படாதா என்ற நல்லெண்ணத்தினாலும், மொத்தத்தில் உற்பத்தி பெருகி, செல்வம் வளர்ந்தால், பாடுப்டுபவனுக்கு நலம் கிடைக்கும் என்ற நோக்குடனும் இயந்திரங்களைக் கண்டு பிடித்தனர் — ஆனால், அதனைக் கொண்டு, பாட்டாளியை மேலும் கசக்கவே, முதலாளிகள் முனைந்தனர்.

படிப்பு இல்லை; ஏழைக் குடும்பம்; பதின்மூன்று குழந்தைகள் உள்ள குடும்பம், அதிலே பிறந்த ரிச்சார்டு ஆர்க்ரைட் கண்டுபிடித்ததுதான், நூற்பு இயந்திரம்—கையால் நூற்பதைவிட நேர்த்தியாகவும், அதிக அளவிலும், நூற்கக்கூடிய இயந்திரம். கைத்தொழிலில் ஈடுபட்டுக் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கும் பாட்டாளியின் வியர்வையைக் கண்டு ஆர்க்ரைட் மனம் எவ்வளவோ பாடுபட்டது! அவர்களின் துயர் துடைக்க வேண்டும் என்று எண்ணம் உதித்தது, அவனுக்கு ஒரு ஆராய்ச்சிக் கூடம் கிடையாது, அறிவளிக்கும் ஏடுகள் கிடையாது, அவன் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டதே ஐம்பது வயதான பிறகு தானாம்! அவன் தொழில், க்ஷவரம் செய்வது! அதிலே பிழைக்க வழியில்லை, எனவே, தலைமயிர் வாங்குவது, சாயம் போடுவது, அதைத் தலைக்கு சவுரிகளாக்கி விற்பது — இது அவன் தொழில்! வறுமைதான் தோழன்! மனைவியோ, கடிந்துரைப்பாள், அவன் மனமோ, நூற்பவர்களின் கஷ்டத்தைப் போக்கி, உற்பத்தியின் அளவைப் பெருக்கவல்ல ஒரு நூதனமுறையைக்கண்டுபிடிக்க வேண்டும் என்பதிலே சென்றது! விதவிதமான பொம்மை இயந்திரங்கள் செய்வானாம்! வறுமையால் வாடிய மனைவி இந்த வீண்வேலை செய்யும் கணவனிடம் சண்டையிடுவாளாம், பொம்மைகளை உடைத் தெறிவாளாம். கந்தல் உடை! கண்கள் ஏதோ ஒருவித 'பித்தம்' அவனுக்கு இருப்பதைக் காட்டிற்று. கடைசியில், அவன் இயந்திரத்தைக் கண்டுபிடித்தான்

இருபதாண்டுகளில் — அவன் கண்டுபிடித்த இயந்திரத்தின் துணைகொண்டு, இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும், 142 பெரிய நூற்பு மில்கள் கட்டப்பட்டன; 92,000. தொழிலாளர்கள் பணியாற்றினர்; 7,000,000பவுன் பெறுமானமுள்ள சரக்கு உற்பத்தி செய்யப்பட்டது

## அவமானம்

தன்னுடைய பழைய மோட்டார் காரைக்கொண்டு வந்து நிறுத்திவிட்டு, அருகிலிருந்த கடைக்குப் போனார், ஒரு கனவான். போகுமுன், அங்கே நின்றுகொண்டிருந்த ஒருவனிடம் "தம்பி! கொஞ்சம் காரைப் பார்த்துக்கொள். வந்ததும் காசு தருகிறேன்" என்றார். ஐந்து நிமிடங்களில் திரும்பியதும் நாலணாவை எடுத்துக்கொடுத்தார் அந்த ஆளிடம்! அவன் வாங்க மறுத்ததோடு ஒரு ரூபாய் வேண்டுமென்றான்.

"என்னப்பா! ஐந்து நிமிடங்களுக்கா ஒரு ரூபாய் கேட்கிறாய்,"

"ஐந்து நிமிஷங்களுக்கு அல்ல சார்! இந்நேரம் வரையில், இது உன்னுடைய காரா — உன்னுடைய காரா என்று கேட்டவர்களுக்கெல்லாம், ஆமாம்! ஆமாம்! என்று சொல்லி அவமானப்பட்டேனே அதற்குத் தான்!" என்றான்.

இது, முதலாளியைச் சீமானாக்கிற்று. தொழிலாளிக்குப் புது வாழ்வு அளிக்கவில்லை.

வேலைக்கு அளவு கிடையாது, கூலி நிர்ணயம் கிடையாது, வேலை நிச்சயமும் கிடையாது.

ஏழாண்டுச் சிறுவர் சிறுமிகள், இந்தத்தொழிற்சாலைகளிலே வேலை வாங்கப்பட்டனர் — சிறுவர்களுக்குக் கூலி பெரியவர்களுக்குத் தருவது போலவா! இல்லை. எனவே, சிறுவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதிலே, முதலாளிக்கு இரட்டைச் சந்தோஷம்; கொழுத்த இலாபம்.

மதவாதிகளுக்கு இது தெரியும் — அவர்கள், தேவாலயத்திலே, அன்பு பற்றி அரிய உபதேசம் அளித்தனரே தவிர, அரும்புகளைக் கசக்கிப் பிழியும் இந்த அக்ரமத்தைக் கண்டிக்கவில்லை; எப்படிக் கண்டிப்பார்கள், புதிய ஆலயம் கட்ட, தொழில் அதிபன் தயவு வேண்டும்; காணிக்கை தரும் வசதி அவனிடம்இருக்கிறது. ஏழையிடம் என்ன இருக்கிறது கொடுக்க!

மன்னனின் கொடுங்கோன்மையையும், சீமான்களின் செருக்கையும், சட்டத்தை மதியாத போக்கையும், கண்டித்தவர்கள், மாமன்றத்தில் வீற்றிருந்தார்கள்—மண்டலத்தின் பாதுகாப்புக்கும் அதன் கீர்த்தி வளருவதற்கும், வழி என்ன? வகை யாது? என்று விவாதித்துக் கொண்டிருந்தனர்; ஆனால் குழந்தைகளைச் சித்திரவதை செய்யும், கொடுமைக் கூடங்கள் பற்றி, ஒரு சொல் கூறவில்லை; கவனிக்க மறுத்தனர்.

காதற் கனி! நாட்டின் செல்வம்! குடும்பக் கருவூலம்! தெய்வம் தந்த பிரசாதம்! தெவிட்டாத தேனமுதம்! — என்றெல்லாம், குழந்தைகளை, கவிவாணர்கள். அழகழகாக வர்ணித்தனர்—பரிசு பெற்றனர்—பாராட்டுதலாவது கிடைத்தது; ஆனால் அந்தக் குழந்தைகள், துள்ளி விளையாடி, பெற்றோரை மகிழ்வித்து, ஊருக்கே, குதூகலமளிக்க வேண்டிய வயதில், இரவில் கூட, ஆலைகளிலே அடைப்பட்டுக் கிடந்தன; அந்த அரும்புகள் கூலியாகக் கொண்டுவரும் 'காசு' குடும்பத்துக்குத் தேவையாக இருந்தது! நாட்டின் 'எதிர் காலம்' இப்படி நாசமாக்கப்பட்டு வந்தது; இது அக்ரமம் என்று கேட்கும் 'நல்லவர்' கிளம்பவில்லை. இது தேவை! என்று வாதிட்டார், பிட் எனும் முதலமைச்சர். 1796ம் ஆண்டு, குழந்தைகள், நாட்டின் உற்பத்திப் பெருக்கத்துக்கு, செல்வ வளர்ச்சிக்கு, 'சேவை' செய்வதைப் பாராட்டி, இந்த முறையை ஆதரித்து, அவர், மாமன்றத்திலே சொற்பொழிவே செய்தார். அவ்வளவு, அன்பு உள்ளம் இருந்தது!!

பதின்மூன்று பதினான்கு மணி நேரம், ஒரு நாளைக்கு, 7 வயதுச் சிறுவர் சிறுமியர் வேலை வாங்கப்படுவதை சர். ராபர்ட் பீல் எனும் மற்றோர் மாமன்றத்தார் கண்டித்தார்; அவருடைய தகப்பனாரே ஒரு ஆலை நடத்தி வந்தார். காலை 6 மணிக்கு வேலை தொடங்கும் இரவு 7 மணி வரை நடைபெறும், இடையில் அரை மணி நேரம் சாப்பாட்டுக்காக ஓய்வு! இந்த அக்ரமத்தைக் களைய, எவ்வளவு போர் தேவைப்பட்டது. ஒரு நாளைக்குப் பன்னிரெண்டு மணி நேரம் வேலை செய்தால் போதும், என்று சட்டம் பிறக்கவே எவ்வளவு காலம் பிடித்தது? 1802ல், அப்படி ஒரு சட்டம் பிறந்தது—பனிரண்டு மணி நேர வேலை! இது பெரிய கருணை என்று கருதப்பட்டது.

இந்தச் சூழ்நிலையிலே தான் இருளை விரட்டும ஒளி கிடைக்கச் செய்ய வேண்டுமென்று அரும்பாடு பட்டார், ராபர்ட் ஓவன்.

ராபர்ட் ஓவன், ஏழையர் உலகிலே பிறந்தவன் தான் — தகப்பனார் 'சேணம்' தயாரிக்கும் தொழில் செய்துவந்தார். 'ஓவன், 'இரண்டு எழுத்து' கற்றுக்கொள்ளவே முடிந்தது; ஒன்பதாம் வயதிலேயே ஒரு கடையிலே வேலைக்குச் சென்றான்—எடுபிடி ஆளாக! படிக்க முடியுமா ஏழை! சம்பாதித்தாகவேண்டுமே!! படிப்படியாக வேலை உயர்ந்தது, இலண்டனில் துணிக் கடையில் வேலை பார்த்தான்; பதினெட்டாம் வயதில் சொந்தக் கடை வைத்தான்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்தவனுக்கு, இது வாழ்க்கையில் வெற்றி என்றுதான் தோன்றும்—இதுநாள் வரைகஷ்டப்பட்டதுபோதும்இனிக் கொஞ்சம் நிம்மதியாக வாழலாம், அழுக்கற்ற உடை அணியலாம், வயிறாரச் சாப்பிடலாம், வேண்டியவர்களுக்கு விருந்தும் அளிக்கலாம்; வேடிக்கை காணலாம், இசை கேட்கலாம், இன்பமாக இருக்கலாம் என்றுமட்டுமே தோன்றும்.

ஓவன் அவ்விதம் எண்ணவில்லை. வயது பதினெட்டு, சொந்தக் கடை! ஆனால், அவன் கண்களில், இங்கிலாந்திலே பூத்திருந்த இயந்திரத் தொழில்வளம் தெரிந்தது; இயந்திரங்கள் செய்வது என்று தீர்மானித்தான்—நூறு பவுன்கள் கடன் வாங்கி, இயந்திரம் செய்யும் தொழிலைத் துவக்கினான் — பலன் தரவில்லை. ஓவனுடைய சுறுசுறுப்பும் திறமையும் தெரிந்த ஒரு ஆலை அதிபர், ஆண்டுக்கு முன்னூறு பவுன் சம்பளம் கொடுத்து, ஓவனை, ஆலைக்கு மானேஜராக்கிக்கொண்டார்; வயது இருபது! ஐந்நூறு தொழிலாளர்களைக் 'கட்டி மேய்க்கும்' வேலை ஓவனுக்கு!!

கட்டி மேய்ப்பது! உண்மையில் தொழிலாளர்களை வேலைவாங்கி வந்த முறை அதுபோலத்தான்.

பட்டிக்காட்டிலே பிறந்து, ஒன்பது வயதுமுதல் உழைத்து, திறமையாலும், சுறுசுறுப்பாலும், முன்னேறி, ஆலை மானேஜராகிவிட்டபிறகு, ஓவன், என்ன செய்ய வேண்டும் — சமூகத்திலே பெரும்பாலாரின் போக்குப்படி அவர் நடப்பதானால்! ஆண்டவன் தனக்கு அருள்பாலித்ததற்கு நன்றி கூறிட வேண்டும் — அதாவது உபதேசியாருக்கு உற்சாகம் வரும் அளவுக்குக் காணிக்கை தரவேண்டும் — ஊரில் ஒரு புள்ளியாகிவிட்டோம் என்று மகிழவேண்டும் — ஆலை அதிபனுக்குத் தெரியாமல், ஏதேனும் கொள்ளை அடிக்க வழி இருக்கிறதா, கடவுள் கண்திறப்பாரா, என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்! ஆனால், ஓவன், அவ்விதம் எண்ணவில்லை. தொழில் வளம் பெருக, இயந்திரம் கிடைத்தது; தொழிலாளர் வாழ்வில் வளம் பெற, முறைவேண்டும் என்று எண்ணலானார்.

அதிகநேரம் வேலைவாங்கவேண்டும்; குறைந்த அளவு கூலிதர வேண்டும்; அப்போதுதான் இலாபம் நிரம்பக்கிடைக்கும், என்பதுதான் அன்று தொழில் உலகக் கருத்து; அன்றுமட்டுமா! தொழில் உலகு, இலாப வேட்டைக் காடாக உள்ள மட்டும், இந்தக் கருத்துத் தான்!!

ஓவன், இதற்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துக்கொண்டிருந்தார்.

குறைந்த நேர வேலை; நிறைந்த சம்பளம்; மகிழ்ச்சியுள்ள தொழிலாளர்—இது தான் உற்பத்தியின் அளவு தரம் ஆகிய

வற்றினைப் பெருக்கும், உண்மை இலாபம் அதிலேதான் இருக்கிறது, என்று எண்ணினார். வாய்ப்புக் கிடைத்தால் இதனை நடைமுறையில் செய்து காட்டமுடியும் என்று உறுதியாக நம்பினார்.

வாய்ப்புக் கிடைத்தது, ஸ்காட்லாந்து நாட்டிலே இருந்த, நியூலானர்க் ஆலை, விலைக்கு வந்தது; ஓவன் அதை வாங்கினார்.

இந்த ஆலையை விற்றவரின் மகளையே, ஓவன், திருமணம் செய்து கொண்டார்.

ராபர்ட் ஓவன், முதலாளி ஆகி விட்டார்!

மூட்டை சுமக்கும் கூலியாக இருந்தார் — எடுபிடியாக இருந்தார் — இப்போது? முதலாளி! உழைப்பால் உயர்ந்தார்!! உழைப்பால் யாரும் உயர முடியும்; ஏழையாக இருக்கிறோமே, கூலியாக இருக்கிறோமே, என்றுகுறைபட்டுக் கிடப்பது தவறு, இதோ ஓவன் நிலை உயர்ந்ததைப்பார், உழைப்பால் உயர்ந்தான், அதுபோலப் பாடுபடு, பொறுமை பொச்சரிப்பு, ஆத்திரம் மனக்குறை எதுவுமில்லாமல், பகவான் கண் திறப்பார், நிலை உயரும், என்று உபதேசம் செய்கிறார்களல்லவா — ராபர்ட் ஓவன் அந்த உபதேசிகள் சுட்டிக் காட்டும் 'பெரிய மனிதர்' ஆகி விட்டார்! இத்துடன், திருப்தி அடைந்தாரா? அடைந்திருந்தால், அவர் ஏன், இன்று போற்றப்படுகிறார்! எத்தனையோ பணந்தேடிகளிலே இவரும் ஒருவர் என்று வரலாறு கூறி இருக்கும். ஆனால் ராபர்ட் ஓவன், தன் சுகத்தை அல்ல, பாட்டாளிகளின் நலனைப் பெருக்க வேண்டும் என்ற பெரு நோக்கம்கொண்டார். நியூலானர்க் ஆலையை, இதற்கான ஆராய்ச்சிக் கூடமாக்கினார். (தொடரும்)

# இழந்த காதல்

கண்ணடிபட்டு கலங்கிப்போன பேரரசுகள், ஏராளம்! கட்டிளங்காளை மேல் கொண்ட காதலுக்காக ஆடம்பரங்களைத் துறந்து வெளியேறிய அணங்குகளின் வரலாறுகள் ஆயிரமாயிரம் உண்டு! கவிதைகளானாலும், பார்புகழும்காவியங்களானாலும்சாகாத சித்திரம் என்று வர்ணிக்கப்படுகிற நாடகமானாலும், காதலும், காதலர் தம் கனிமொழிகளும், இடையிலே 'வில்லன்' தோன்றுவதும், இடையே தந்தை சீறுதலும், இவைகளைத் தாண்டி அவர்கள் வெற்றி பெறுதலையுமே அதிகமாகச் சித்தரிக்கும். ஆனால், உலகில், வெற்றிபெற்ற காதலைவிட, இழந்த காதல்கள்தான், மக்கள் மனதில் நிரந்தர இடத்தைப் பெற்றுவிடுகின்றன. துன்பம் தொடர்தலும், முடிவில் இன்பம் பெறுவதும் சாதாரணம்! ஆனால், இன்பம் பெறுவோமென்று துவங்கிய ஏந்திழையின் ஆசைக் கனவும், ஏக்கத்தால் உருமாறிப்போன காதலனும் கடைசியில் சோக முடிவுக்கு ஆளாகும்போது, மக்களின் மனம் அனலிடு மெழுகாய் உருகிவிடுகிறது! அத்தகைய நிகழ்ச்சிதான், இது. கதையல்ல! வாழ்க்கை நிகழ்ச்சி!!

ஒவ்வொருவரும் ஆழ்ந்துகவனித்து வந்த ஆங்கிலப் பேரசியாரின் அருமைத் தங்கை மார்க்கெரெட் அம்மையின் காதல், கருகிவிட்டது! கடிமணம் நடைபெறலாம் அவருக்கும் டவுன்சென்டுக்கும் என்றுதான் எதிர்பார்த்திருப்பர் — காதல் இலக்கியங்களை ரசித்துப் படித்தவர்கள்.

“மன்னவா! மணிமகுடமா? காதல் ராஜ்யமா? எதுவென்பதை முடிவு செய்யவேண்டும், நீங்கள்.”

“ஆம், அரசே! மாபெரும் நிலபரப்புக்கு நீங்கள் சக்கரவர்த்தியென்பதை மறந்திடக்கூடாது.”

“சிம்மாசனத்திற்கு அடிபணிய ஆயிரமாயிரம் பேர் காத்துக்கிடக்கிறார்கள்—படையுண்டு—பொக்கிஷம் இருக்கிறது—அரண்மனை மிகப் பெரியது—ஆடம்பரம், அந்தஸ்து, இவையெல்லாவற்றையும் கேவலம் ஒரு பெண்ணுக்காகவா இழந்துவிடப் போகிறீர்கள்?”

“இப்படித்தான் நாடு, கேட்டது, 1936ம் ஆண்டில், இன்று அரசியாயுள்ள எலிசபெத்தின்பெரியப்பாவான எட்டாவது எட்வர்ட்டை. சிக்கலான பிரச்னைதான் — சிம்மாதனமா! சிற்றிடையாளுடன் வாழ்வா! என்று முடிவு கட்டுவது.

ஆனால் எட்வர்ட், “அவளுடைய இதய சாம்ராஜ்யமே, எனக்கு வேண்டும். அன்பைக்கொண்டு, அங்கே ஆட்சி செலுத்துகிறேன்” என்று தெளிவாகத் தெரிவித்துவிட்டு, அரச போகங்களை வெகு எளிதில் துறந்தார். அவரது, காதல் சாகவில்லை! தியாகம் என்கிறது, உலகு! ஆனால், அப்படி தியாகம் செய்ய வேண்டிய அதே நெருக்கடி, இப்போது மீண்டும் ஏற்பட்டது, அரசகுல நங்கையான மார்க்கெரெட்டுக்கு. மணிமுடிக்குள்ள 'வாரிசு' உரிமையை நீங்கள் இழக்கவேண்டும் என்றனர்— சரி, என்றாள்; மதபோதகர்கள் உங்களைச் சாதாரண குடிகளாகவே கருதுவர், என்றனர்-மனமொப்பினாள்; தங்கள் காதலன் ஏற்கனவே ஒரு தடவை திருமணம் செய்துகொண்டவராமே, அப்படிப்பட்டவரை மணப்பதென்றால் எந்தவித அந்தஸ்தும் உங்களுக்குக் கிடைக்காதே என்றனர் சம்மதமே, என்றாள்-எனினும், கடைசியில் பணியவேண்டியதாயிற்று!

அப்படிப் பணியும்படி மார்க்கரெட்டை நெருக்கிய நிகழ்ச்சிக்குள் ஒரு உண்மை மறைந்துகிடக்கிறது. இங்கிலாந்து, பழைய இங்கிலாந்தல்ல! புது இங்கிலாந்து! — என்று காட்டிக் கொள்ள முன்வரலாயிற்று. ஏடுகளில் எல்லாம் இதைப்பற்றியே, விளக்கங்கள்! எங்கும் விவாதங்கள்! இந்த இரு காதலர்களும், பெரிய பிரச்னையாகி விட்டனர்.

இதனால், ஒரு வாதம் கிளம்பலாயிற்று, 183 ஆண்டுகளுக்கு முன் நிறைவேற்றப்பட்ட மன்னர் குடும்பத் திருமணச் சட்டத்தை மாற்றினால் என்ன, என்பதாக.

மன்னர் குலத்தினர், சாமான்யர்களுடன் தொடர்பு கொள்வதைத் தடுப்பதே இந்தச் சட்டம்! மன்னராக வருபவர், மார்க்கத்துக்கும் தலைவர் என்பதால், இப்படி சில கட்டு திட்டங்களுக்கு அடங்கியிருக்க வேண்டுமென்பது, பழைய விதி. இது, ஏன்?— என்று கேட்கலாயினர், அவர்கள். இந்த விதியை மாற்றி, மன்னர் குலத்தினரும் சாதாரண குடிமக்களைப்போலவே விரும்பியவர்களை மணக்க ஏதுவாக இருக்கும்படி சட்டத்தை மாற்றினால் என்ன— என்று பேசலாயினர், அவர்கள்.

இந்தப் பேச்சு எங்கே கொண்டு போய்விடும்? மன்னருக்கு என்று, இங்கிலாந்து கடைபிடித்து வரும், மரியாதைகள் எத்தனையெத்தனை! உலகிலேயே, சற்றும் ஆடாது அசையாது—அதே நேரத்தில், பெருமிதத்தோடு-வைக்கப்பட்டிருக்கும் ஒரேஒரு அரச குடும்பமாயிற்றே, அது! 'சாதாரணது' களின் நிலைக்கு,கொண்டு வரலாமா, அதனை? அந்தநிலையும் தன்னால்தானா, வரவேண்டும்!-மார்க்கரெட்டை இந்தப் பிரச்னை, தாக்கியது.

காதலை, துறக்கத் தீர்மானித்து விட்டார்! அவருடைய இழந்த காதலால், ஒரு நெருக்கடி சமாளிக்கப்பட்டு விட்டதாக, மகிழக் கூடும் மன்னர்குல மாளிகையினர்!! ஆனால், பாடும் குயிலும், பறக்கும் சிட்டும், இன்னிசைக் கீதமும், இருதயத்தைத் தடவும் பழைய கனவுகளும் மார்க்கரெட்டைத் தாக்கும் போது, பெருமூச்சுகள் மூலமும், கண்களின் வழியாகவும், அவரது காதல் சிந்தப்போகும் கண்ணீர், நம் கண்முன் காட்சி தருகிறது. உலகமும், உண்மையில் அதற்காகப் பரிதாபம் அடைகிறது. ★

# அற்பானந்தம் காண்போர்

“ஏற்றமிகு இடத்திலிருப்பதாலேயே எதையும் பேசிடலாமா! இதை வன்மையாகக் கண்டிக்கிறோம். இங்கே, நீர், இந்தியாவின் தூதராகயிருந்தது சரி. அதனால், எமது நாடு, முழுதும் மதமெனும் ஆசை பிடித்து அலைவதுபோல பேசியிருக்கிறீரே, ஐயா! எமது கொள்கையென்ன தெரியுமா? மதம் என்பது விஷம்!—மதம் என்பது மயக்கும் அபினி!! இதை நாங்கள் மறக்கவில்லை; கடவுள்! கடவுள்!—என்று கர்ச்சிக்கிறீர்களே, அந்தக் கடவுளை சிருஷ்டித்தவன் மனிதன்தான் என்பதுதான் எங்கள் கருத்து. இதை நீர், அறியவும்” என்று வேறு சமயமாகயிருந்தால், ரஷ்ய இலாகாவினர் சீறியிருப்பார்கள். ஆனால், இப்போது இரு நாடுகளுக்குமிடையே புதியதோர் உறவு, பூத்துப் பொலிகிறதல்லவா? அதனால் போலும், அமைதியாக, ரஷ்ய வானொலி, உலகுக்கு அறிவித்துள்ளது—மதம் மக்களுக்கு விஷம்! கடவுளை மனிதன் உண்டாக்கினான்!! எனும் கருத்துக்களை.

பரோடாவிலே, இரண்டு வாரங்களுக்கு முன்பு, மாணவர்கள் மத்தியிலே “ரஷ்யாவில் கூட மதத்தை விரும்புகிறார்கள்” எனும் கருத்துப்பட பேசினாரல்லவா, பெரிய மனிதர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன்—அவர் பேச்சுக்கு விளக்கம் கூறுவதுபோல வந்திருக்கிறது இச்செய்தி.

சிறந்த அறிஞர் என்கிறார்கள் அவரை—கல்லூரிக் காளைகளுக்கு புது உலகைக் காட்டும் பேராசிரியத் திருப்பணியில் ஈடுபட்டிருந்தவர்தான் — அமெரிக்க மேடைகளில் அழகாகப்பேசி பாராட்டுகளைப் பெற்றிருக்கிறார் — இருந்தாலும், இந்தவிஷயத்தில், எவ்வளவு இறங்கிவந்துவிடுகிறார்.

மதம்! கடவுள்!—இவைபற்றி, உலகில் எழும்பியிருக்கும் கருத்தலைகளுக்கு, அவர்கள் எவ்வளவு பெரிய வேதாந்தியானாலும், விளக்கங்களைக் கூறும் அரசியல்வாதியானாலும், மேதையென்று புகழப்படும் அருகதை பெற்றோரானாலும், தக்க பதில் தருவதில்லை—ஏனெனில் தரமுடிவதில்லை. மதம் என்றால் என்ன? கேட்டுப்பாருங்கள், ஒவ்வொருவரையும்! நாமம் போடுதல் மதம் என்பாரொருவர்—நீறு பூசுதலே உண்மை மதம் என்பார் இன்னொருவர் — இல்லை, இல்லை இரண்டும் இல்லாமலிருத்தலே மதம் என்பார் மற்றொருவர்—ஞாயிறு அன்று மாதாகோவிலுக்குப் போய் மன்னிப்பு பெற்றுவிடுவதே மதம் என்பார் வேறொருவர். இப்படி, அந்த ஒரு சொல்லுக்கு, ஒரே வரியிலே விளக்கம் காணமுடியாது. அப்படி ஒரே எண்ணத்துடன், நாடுகள் யாவும் வாழ்கிறதென்றும் கூறமுடியாது. உலகச் சரித்திரத்தில், தெளிவு ஏற்படும் கட்டத்திலிருந்து இன்று முதல் எடுத்துப் பார்த்தீர்களேயானால், மதம், எப்படி எப்படி மாறிவந்திருக்கிறது என்பதை உணரலாம்.

இங்கிலாந்து ஒரு காலத்திலே, தாரையும் ஓடையும் வணங்கிக்கொண்டிருந்தது! ரோமாபுரியும், கிரேக்கமும் தொழுதுகொண்டிருந்த கடவுள்கள் எண்ணற்றவை! எகிப்தில், கிளியோபாத்ரா வாழ்ந்த காலத்தில் இருந்த மதத்துக்கும் இப்போதுள்ள மதத்துக்குமிடையே எவ்வளவோ வேற்றுமையுண்டு! ஜப்பானில், அன்றிருந்த மதம் வேறு—சீனாவில், உலவிய மதம் இப்போது இருப்பது அல்ல. உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் மட்டுமல்ல, நமது ‘பரத’ கண்டத்திலேயே, மதம், அன்று முதல் இன்றுவரை ஒரேமாதிரியாக இருக்கிறதா என்று கேளுங்கள்—அறிவியக்க வாதிகளை வேண்டாம்; ஆங்கில நூல்களையும் படித்து ஆதாரம் தேடுவதாகக் கூறப்படும் குன்றக்குடி அடிகளானாலும்; அக்பர் ஆண்ட விதம்; ரஜபுத்ரர் எழுச்சி முதலியவைகளைப் பற்றி ஆதாரங்களை அள்ளித் தரும் சரித ஆசிரியர்களானாலும்சரி, கேட்டுப் பாருங்கள்—மதம், நித்யமானது! மகேசன் ஆதிகாலத்தில் உண்டாக்கியது. அன்று முதல் அழியாமல் சிரஞ்சீவியாயிருப்பது!—என்று, அவர்களால் தெரிவிக்க முடியாது. வேண்டுமானால், பரோடாவிலுள்ள மாணவர்கள் மத்தியில், பேசுவதுபோன்ற சந்தர்ப்பம் கிடைத்தால் — ராதாகிருஷ்ணன் போன்றோர், இது பற்றி விருப்பம்போல்பேச முடிகிறது — ஏனெனில் பேராசிரியர்களுக்குக் கட்டுப்பட்ட மாணவர்களல்லவா, இருப்பது. அதனால்! இப்படிப் பேசுவோரை பொது மன்றங்களுக்கு வாதாட அழையுங்கள். வரமாட்டார்கள்!!

*

உலகில் உலவும் கிருஸ்து மதத்தாரால் இயேசுநாதரைக்காட்டமுடியும், இஸ்லாத்துக்கு இருக்கிறார் முகம்மதுநபி, புத்தரும் வர்த்தமானரும் புத்தசைன மதத்தை நிறுவியவர்கள் என்று கூறமுடியும். ஆனால், நமது ‘அருமந்த’ இந்து மதத்தை ஏற்படுத்தியவர் இவர்தான்—இதுதான் இந்துமதச் சாராம்சங்களை எடுத்தியம்பும் வேதம் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. நான்கு வேதம் என்பர்! உபநிடதம் என்பர்! பகவத்கீதை பகருகிறது உண்மைகளை, என்பர்! பாகவதம் என்பர்! பக்த. லீலாமிருதம் என்பர்! அது மட்டுமா, இந்து மதம் எப்படியெப்படி உருமாறிற்று — வைணவம் முளைத்தது எப்படி—வடகலை, தென்கலை உருவானதெவ்விதம்—துவைதம் ஏற்பட்டதேன்? அத்வைதம் ஏற்படவேண்டிய அவசியமென்ன? விசிஷ்டாத்வைதம் எதற்காக ஏற்படவேண்டும்? என்றெல்லாம் கேட்டால், வாதாட முடியாதவர்கள் “நீ, வம்புக்காரன்!” என்பார்கள்—வாதாடும் வல்லமைகொண்டவர்கள், “ஏனப்பா! இப்படி கிளைகளாகப் பிரிந்திருப்பது, இந்து மதத்தில் மட்டுந்தான் என்றெண்ணுகிறாயோ? கிருஸ்து மதத்தில், கத்தோலிக்கர்களாகவும், பிராடெஸ்

சீமானொருவன், தன்னுடைய நில புலன்களைச் சுற்றிப்பார்க்கப் போன இடத்தில், கார் பழுதாகிவிடவே ஒரு ஏழை விவசாயியின் வீட்டில் தங்க நேர்ந்தது.

இரவு, ஏதோ தன் வீட்டிலிருந்த உணவை ஒரு தட்டில் வைத்து, அவர் முன் கொண்டுவைத்தான், விவசாயி, அந்த விவசாயிடம் ஒரு நாய் உண்டு. அது, மிகவும் அன்புடன் அந்தச் சீமானின் மீது விழுந்தும் புரண்டும், உறவுகொண்டாட ஆரம்பித்தது, அதைக் கண்ட சீமான், விவசாயியைப் பார்த்து, “ஏய்! உன்னைப்போல, உன் நாயும் என்மீது எவ்வளவு விசுவாசமாயிருக்கிறது” என்றான் திமிருடன். “அப்படியில்லை, சாமி! அதற்குச் சோறுவைக்கிற தட்டில் நீங்கள் சாப்பிடுவதைக் கண்டு தன்னுடைய இனமாக்கும் என்று உறவு கொண்டாடுகிறது!” என்றான், சுடச்சுட, அந்த விவசாயி.

டெண்டுகளாகவும் பிரியவில்லையா? பியூரிடன்கள் என்றோர் பிரிவும் ஏற்பட்டதுண்டு தெரியுமா? இஸ்லாத்திலும், பிரிவுகளிருப்பது அறிவாயா! புத்தமதத்தைப் போற்றுகிறாயே, அதிலும்கூட ஹீனயனம் — மகாயனம் என்று உண்டாயிற்று அன்றோ?" என்று வாதாடுவர்.

உண்மைதான்; இந்து மதத்தில் மட்டுமல்ல, ஏனைய மதங்களிலும் பிரிவுகள் ஏற்பட்டதுண்டு—ஆனால், அவை யாவும் அடிப்படைக் கொள்கைகளிலிருந்து பிரிந்து செல்லவில்லை —ஆண்டவன் ஒருவரே என்னும் கோட்பாடுதான், கத்தோலிக்கருக்கும் புராடெஸ்டண்டுக்கும்—ஷியாக்களாயிருந்தாலும் சன்னிகளாயிருந்தாலும், நபிகள் நாயகம் ஒருவரைத்தான் போற்றுவார்கள் — அது போலத்தான் புத்தமதத்தினருக்கும்-ஆனால்,இந்துமதத்தைச் சார்ந்தவர்களுக்கோ இருக்கும் கடவுள்கள் கணக்கில. மூலவர்களே மூவர் –அவர்களுடைய பரிவாரங்களிலிருந்து சங்கிலி சாமுண்டிவரை இருக்கும் விதவிதமான தெய்வங்கள் எத்தனை எத்தனை என்பதை கணக்கிடமுடியாது.

இந்துமதத்தைவிட—எத்தனையோ விதங்களில் சிறந்ததுதான்கிருஸ்து மதம் என்கிறார்கள் — என்றாலும், ரஷ்யாவிலே, ரஸ்புடீனை எதிர்த்துக் கிளர்ச்சிகள் நடைபெற்றன. காரணம், ரஸ்புடீன் ஏசுநாதரின் சீடன் என்பதாலோ, அந்த ஏசு சொன்ன கொள்கைகள் பிடிக்கவில்லையென்பதாலோ அல்ல! அப்படிச்சொல்லிக்கொண்டு அட்டகாசங்களைச் செய்தான் — மோகவெறியாட்டமானாலும், அரசியலானாலும், போர்க்களச் செய்தியானாலும் தனக்குமட்டும் விதிவிலக்குண்டு; ஏனெனில் தான் ஆண்டவனின் அடியார்களில் ஒருவன்; கர்த்தருக்கும் சாமான்யர்களுக்கிடையே 'தொடர்பு' உண்டாக்கக் கூடியவன் என்று சொல்லிக்கொண்டு ஊர் கெடுக்கும் வேலையில் ஈடுபடலானான்! அதுபோன்ற 'ரஸ்புடீன்கள்' எல்லா மதத்திலும் இல்லாமலில்லை — அதனால்தான், மதம் விஷமாகவும், அபினியாகவும் மாறி விடுகிறது.

இந்து மதத்தில்தான், அடடா! எத்தனையெத்தனை சாதுக்கள்—தம்பிரான்கள்—காஷாயம் உடுத்திவிட்டாலே, அவன் எவ்வளவு பெரிய மகானாகிவிட முடிகிறது? எந்த மகான்தான். சதா ஈசனைப் பஜித்துக்கொண்டு, தன் 'கட்டை'க்கு நற்கதி கிடைக்க வேண்டுமென்று துதிக்கிறார்! காரிலேறிக்கொண்டல்லவோ தர்மபுரமும் குன்றக்குடியும், அறிவியக்கத்தினர்மீது. பாய்கிறார்கள்! இப்படி மதப்போர்வையில் உலவுவோரின ஆசைப்படி நடக்கும் விழாக்கள், உற்சவங்கள்தான் எத்தனையெத்தனை! இதனால் மக்களிடையில் விரயமாகும் நேரமும், பணமும்தான் எவ்வளவு? இதையெல்லாம் மார்க்சும் லெனினும் கணக்குப்போட்டுப்பார்த்த காரணத்தால்தான், போதை தரும் பொருள் என்றனர் மதத்தை! ஆட்கொல்லும் நச்சு என்று வர்ணிக்கலாயினர்!

*

கடவுளைத் துதிப்பதிலும் போற்றுவதிலும் என்ன கஷ்ட

# உழைப்பாளர் கட்சி செயலாற்றியிருந்தால்?

நடந்த ஜில்லா போர்டு தேர்தலின் போது, காங்கிரஸ் கட்சி நம் இனத்தவர்கள் விருப்பத்துக்கும் நம் மக்கள் எண்ணிக்கைக்கும் ஏற்றவாறு, ஸ்தானங்களையும் தொகுதிகளையும் எடுத்துக்கொண்டு, நீங்கள் மீதி தரும் பாக்கி ஸ்தானங்களை நாங்கள் எடுத்துக்கொள்ளுகிறோம் என்று கூறி, நம்மவர்கள் உத்தரவுக்குக் காத்து நின்றது. காங்கிரஸ்கட்சித் தலைவர்களுக்கு வன்னியர்களிடம் ஏற்பட்ட அச்சத்திற்கும், பொறுப்புணர்ச்சிக்கும் காரணம், தனிப்பட்ட எவருடைய செல்வாக்குமல்ல. நம் அரசியல் அமைப்பினிடத்தில் காங்கிரஸ் கட்சிக்கு இருந்த நடுக்கமும் பொறுமையும்தான், நம்மவர் கட்டளைக்குக் காத்திருப்பதுபோல் நடித்து வஞ்சம் தீர்த்துக்கொண்டது.

நம்மவர்கள் காங்கிரஸ் கட்சியிடமிருந்து ஏதேதோ சாதித்துவிட்டதாகக் கூறி, சமூகத்தைக் காட்டிக் கொடுத்ததுதான் அவர்கள் சாதிப்பு. அன்று தலைவர்கள் சில சபலங்களுக்கு இடம் கொடுத்ததால்தான் சமுதாயத்தின் தன்மானத்திற்கே சோதனை காலமாக முடிந்தது.

நம் அரசியல் அமைப்பான உழைப்பாளர் கட்சி சென்ற ஜி. போ. தேர்தலில் சமூக மக்களின் விருப்பப்படி போட்டியிட்டிருந்தால் வ. ஆ. ஜில்லா வன்னியர்களைப் பழிதீர்த்துக் கொண்டதும், சேலம் ஜில்லா வன்னியர்களுக்கு நம்பிக்கை துரோகமும், செங்கற்பட்டு ஜில்லா வன்னியர்களை கேலி செய்யுமளவு ஈன புத்தியும் காங்கிரசுக்கு வளர்ந்திருக்குமா! மேலும் வன்னியர் சமூகத்துக்குக் கொடுத்த கல்விச் சலுகையை மாதக் கணக்கு முடிவதற்குள் ரத்து செய்யுமளவுக்கு துணிவு பெற்றிருப்பார்களா. சிந்திக்க வேண்டுகிறோம், வன்னியத் தலைவர்களையும், மக்களையும்.

காங்கிரஸ் கட்சியின் இழிவான அரசியல் போக்குக்கு ஜி. போ. தேர்தலின் போதே புத்தி கற்பித்திருந்தால் புதுவையில் காங்கிரஸ் கட்சி தன் வாலை ஆட்டி இருக்காது, காலத்தில் காங்கிரஸ் கட்சி தன் கருத்தை புதுவை வன்னியர்களுக்கு அறிவித்திருந்தால் கொள்ளைக் கூட்டமும், இன்று கும்மாளம் போடுமா புதுவையில். நூற்றுக்கு எண்பது பேராக வன்னியர் வாழும் புதுவையில், அதுவும் தென்னாற்காடு ஜில்லாவின் ஒரு பகுதியான புதுவையில், அந்த நாட்டின் விடுதலைக்கு காரணமாயிருந்த சமுதாயத்தை, அதன் தலைவர்களான திரு. செல்லம் நாயகர், திரு. சு. பெருமாள் நாயகர் போன்றவர்களை 'துரோகிகள்' என்று காங்கிரஸ் ரவுடிகள் தூற்றவும், இதற்கு நம்மவர்கள் சிலர் துணையாகயிருந்ததும்தான் அங்கு வன்னியர் சமூகம் சிதைந்ததும், சமூக எதிரிகள் பலம் பெற்றதும்.

ஏன் இவைகளை இப்போது கூறுகிறோம் என்றால் மேற்கண்ட செயல்களிலிருந்து காங்கிரஸ் கட்சி நம்மினத்திடம் இன்னும் சூதாகவே நடந்து கொள்ளுகிறது. இதனால் ஒவ்வொரு வன்னியனும் காங்கிரசை ஒழித்துக் கட்டுவதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். கடந்ததுபோக வரும் பொதுத் தேர்தலிலாவது நமது இன அமைப்பான "உழைப்பாளர்" கட்சி மூலம் தமிழகமெங்கும் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட விரைவில் ஆவன செய்யவேண்டும்.

இந்த நேரத்தில் உழைப்பாளர் கட்சியை செயலாற்றும் ஸ்தாபனமாக ஆக்க சில வன்னிய பிரமுகர்கள் முயற்சி எடுத்து வருகின்ற செய்தி கேட்டு மகிழ்கின்றோம். அவர்கள் முயற்சி வெல்க! வெற்றி பெறுக அவர்கள் தொண்டு.

—"உழைப்பாளி"

★

மிருக்கிறது, மனிதனுக்கு. எதுவுமில்லை. ஆனால், அந்தக் கடவுளை, மதவாதிகள், ஒரு வியாபாரப் பொருளாக்கிவிட்டார்கள்—அருமையான சர்க்கரை, வீசை விலை பத்தணா என்று சொல்லி எப்படி வியாபாரி விற்கிறானே, அதுபோலவே, இதோ பார் ஆண்டவன்! அவருக்காகக் காணிக்கை செலுத்து! என்று கேட்கிறார்கள். இதனால், அவர்கள் வயிறும் வாழ்வும் பெருக்கிறது; சுகபோகிகளாக இருக்க முடிகிறது. இந்தச் சூதை அறிந்து கொண்டதால்தான், அறிவியக்கவாதி கூவுகிறான், ஆண்டவன் ஒருவரா? சரி; அவரை அன்பானந்தசொரூபி என்கிறாயா? ஒப்புக்கொள்கிறேன். இந்நிறத்தான்—இவ்வண்ணந்தான் என்று அவரைச் சொல்லமுடியாது என்கிறாயா? அதுவும் சரி. அவரை நினைத்து, மனதுக்குள் தியானிக்க வேண்டுமென்கிறாயா? அதுகூடச்சரி! ஆனால், அவரை வியாபாரப் பொருளாக்கி—வெண்பொங்கல் கேட்கிறார், வெள்ளி யானை கேட்கிறார்—தேரோட்டம் விரும்புகிறார்-திருப்பள்ளியெழுச்சி பாடச் சொல்கிறார்—பஞ்சாமிர்தம் கேட்கிறார்—பாலாபிஷேகத்துமேல் ஆசை—விஷ்ணுவுக்கு சர்க்கரைப் பொங்கல், விநாயகருக்கு கொழுக்கட்டை, சுப்ரமணியனுக்கு பஞ்சாமிர்தம், கிருஷ்ணபிரானுக்கு வெண்ணெய்— இப்படியெல்லாம் ஆக்காதே! ஆண்டவன் பெயரைச் சொல்லி, நீ சுரண்ட நினைக்காதே! விரும்பினால்-உனக்கு ஆண்டவன் மீது உண்மையான பக்தியிருக்குமானால் வீட்டுக்குள்ளே வைத்து வணங்கு என்று சொல்லுகிறோம்.

இப்படிச் சொல்வது, இராதா கிருஷ்ணன்போன்றவர்களுக்குபுரியவில்லை என்பதல்ல பொருள். சகலமும் தெரியும் — என்றாலும், தாங்கள் இதுவரை அமைத்துக் கொண்ட வாழ்க்கைக் கூண்டினை விட்டு வெளியில்வரும் துணிவு ஏற்படுவதில்லை; அதனாலேயே, இப்படியே காலத்தைத் தள்ளிவிடுவோம் என்கிற கட்டத்துக்கு வருகிறார்கள். அந்தக் கட்டத்துக்கு வரும்போது, வேதாந்த விற்பன்னர் என்றும், விவேகி என்றும் போற்றுகிறார்களல்லவா — அதற்காக, ஏதாவது பேசவேண்டும் என்கிற ஆசை எழும்புகிறது. அந்தச் சமயத்தில், இப்படிப்பட்ட 'நாஸ்திகர்களை' ஒருபிடி பிடிக்க வேண்டும், அதைப்பார்த்துத் தன்னைக் கவுரவிப்போர் கைகொட்ட வேண்டும் என்று கருதுகிறார்கள்! அதனாலேயே, இப்படி 'சந்து தேடி' சலித்துக் காரணம் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் உண்டாகிறது—தானிருக்குமிடம் எவ்வளவு பெரிதானாலும், அதைவிட்டு இறங்கிவிடுகிறார்கள்—சாயமும், உடனே வெளுத்து விடுகிறது.

ரஷ்யா, அப்படியிருக்கிறது என்று சொல்லி அற்பானந்தம் பெறவிரும்பினாரே, வேதசிரோன்மணி—இந்த ஆசை இவருக்கு மட்டும்தானா, என்று எண்ணாதீர்கள். விஞ்ஞான சித்துக்கள் விளையும் அமெரிக்காவானாலும் சரி, ஆங்கிலேயர் தம் இருப்பிடமாயிருந்தாலும் சரி, எங்கெங்கு மதப்போர்வையில் மகோன்னதமானவாழ்வை அனுபவிக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் இப்படி ஒரு அற்ப ஆசை ஏற்படுவது, சகஜம் போலும். எப்படி ரஷ்யாவைக் காட்டி பிறரை மிரட்ட எண்ணினாரோ, அதுபோலவே அமெரிக்காவிலும் ஒருவன் முயன்றான்-அறிவியக்கத்தவர் போற்றும் இங்கர்சால் சாகும் சமயத்தில் தன்னருகில் சிலுவையைக் கொண்டுவரச்செய்து, தான்செய்த பாவங்களுக்கெல்லாம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார், என்று செய்தி பரப்பினான். திகைக்கக் கூடச் செய்தார்கள் சிலர்! இது போல, அறிவுலகத்தின் கவனத்தை இழுக்க, இப்படி ஏதாவது சொல்லிவைப்பது என்பது, தோல்வியையுணருவோரின், தொடர்கதை.

அந்தக் கட்டத்துக்குத்தான் சென்று கொண்டிருக்கிறது, மதவாதிகளின் வாதங்கள், இன்றைய தினம். அதையே விளக்குகிறது, இராதாகிருஷ்ணன் பேச்சும்—உடனே ரஷ்யா வெளியிட்ட மறுப்பும்.

★


## காஞ்சியில்

மாநில மாநாட்டு நிதிக்காக
★ சிறப்புச் சொற்பொழிவு ★
6-11-55 ஞாயிறு காலை 9 மணிக்கு
காஞ்சி கண்ணன் டாக்கீஸில்
ஆர். பாபு தலைமையில்
**சி. பி. சிற்றரசு**
பேசுவார்.
—நகர தி. மு. க.


**14-வது வயதில்,**

பார்புகழும், அருமையான அரசியல் கலந்த சோக நாடகத்தை எழுதி பெயர்பெற்றவன், **வில்லியம்பிட்.**

**15-வது வயதில்,**

பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்கு, சிந்தனையூட்டும் கவிதையொன்றைச் சமர்ப்பித்து, தன் புகழுக்கு வித்திட்டான், **விக்டர்க்யுகோ.**

**16-வது வயதில்,**

தன்னுடைய தந்தையாரின் படையில் தளபதியாக ஆனான், உலகையே நிலைகலக்கிய மாவீரன் **அலெக்சாண்டர்.** அரிஸ்டாடலின் தத்துவத்திலுள்ள தவறுகளை அறிஞர் பேகன் இந்த வயதில்தான் எடுத்துக் காட்டினார்.

**17-வது வயதில்,**

பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்திலுள்ள விளக்கு இப்படியும் அப்படியும் 'ஏன்' ஊசலாடுகிறது என்பது பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினார், **கலிலியோ.**

**18-வது வயதில்,**

பிரெஞ்சுக்காரர்களிடம் தாய் நாட்டுப் பற்றை ஊட்டி, போர்க் குரல் எழுப்பினள்,—இறந்தும் புகழ்பெற்ற **ஜோன்-ஆப்-ஆர்க்**

**19-வது வயதில்,**

ஓடிக்கொண்டிருக்கும் ரயில் இன்சின் பற்றிய சித்திரத்தை சிந்தனையில் உருவாக்கினார், **ஸ்டீபன்ஸன்.**

**20-வது வயதில்,**

பிரசித்தி பெற்ற எழுத்தாளராகி, மாற்றாரும் போற்றும் மகோன்னத நிலையைப் பெற்றார் **வாஷிங்டன் இர்விங்.**

**21-வது வயதில்,**

இசையுலகில் தன்னுடைய பெயரை நிலைநாட்டிக்கொண்டார், **பீதோவன்.** பெரியதொரு அரசியல் கட்டுரையை **மாஜினி** எழுதியதும், இந்த வயதில்தான்.

4-ம் பக்க தொடர்ச்சி

சிவப்பு, வெளிர்சிவப்பு, நீலம், வெளிர்நீலம், பச்சை, ஊதா, மஞ்சள், பொன்நிறம் தம்பி! வண்ணம் வகைவகையாகக் கொட்டிக் காட்டப்பட்டிருக்கும் ஓர் அற்புதமான ஓவியச்சாலைபோல், அங்கு மலர்கள்!! மலர்த் தோட்டங்களை அங்கு யாரும் அமைத்திடும் முயற்சியில் ஈடுபட்டில்லை — அவர்கள் காயும் கிழங்கும், கனிவகையும், தேயிலையும் ஏலமும், இவைபோன்றவையும் பயிரிட்டுப் 'பலன்' காணத்தான் பாடு பல படுகிறார்கள். அவர்களின் உழைப்பின் திறம் கண்டு உளம் கனிந்து, புன்னகை பூத்திடும் முகத்தினளாகி, நிலமகள், அவர்களின் உள்ளத்துக்கு உவகை தர இந்த மலர் சொரிகிறாள் மகிழ்ந்து என்று கூறவேண்டும்போலிருக்கிறது. உடன் வந்த தோழர்களில் பலருக்கு அந்த மலர்களின் பெயர்களைகூடத் தெரியவில்லை—எனக்குத் தெரியாது என்ற துணிவில் சிலர், மலர்களுக்கு ஏதேதோ பெயர் கூறினர்.

தேயிலைத் தோட்டங்களால் பெரும்பொருள் ஈட்டிடும் முதலாளிமார்கள் யாரையும் நான் பார்க்கவில்லை. ஆனால் அந்தமாமலைகளைப் பணத்தோட்டங்கள் ஆக்குவதற்காகப் பாடுபட்டுப்பாடுபட்டு, மேனி கருத்துக்கிடக்கும் தமிழ்ப் பாட்டாளிகளை ஏராளமாகக் கண்டேன். தேயிலைச் செடிகளை அவர்கள் வளர்த்திடும் திறத்தினையும், அதற்கு 'நோய்நொடி' வராமல்பாதுகாத்திடும் வகையினையும் கூறித், தமிழ்த் தொழிலாளர்களின் இரத்தம் இந்தச் 'செல்வம்' விளைவதற்காக எவ்வளவு கொட்டப்பட்டது என்பதை என்னிடம், தோட்டவேலை அனுபவமுள்ள நண்பரொருவர் எடுத்துச் சொன்னபோதுதான் எனக்குப் புரட்சிக் கவிஞர்

**சித்திரச் சோலைகளே!**
**உமைத் திருத்த இப்பாரினிலே**
**எத்தனை தோழர்கள் தம்**
**இரத்தம் சொரிந்தனரோ வேரினிலே!'**

என்று பாடியிருக்கிறாரே, அந்தக் 'கவிதை'யின் முழுப்பொருள் விளங்கிற்று.

புலியும் பிறவும், களிறும் காட்டெருமைகளும் ஏராளமாக உலவிடும் பெருங்காடுகளாக இருந்த நாட்களில், அந்தப்பகுதியில், தருக்களை மலைப்பாம்புகள் தழுவிக் கொண்டு கிடக்குமாம், காட்டாறுகள் சிலவேளைகளில் கரிக்குட்டிகளை உருட்டிக்கொண்டோடுமாம், அங்கு காபியும் தேயிலையும், ஏலமும் இன்னபிறவும் பயிரிட்டுப் பணம் பண்ண இயலும் என்ற எண்ணம் எழக்கூட முடியாத நிலை இருந்ததாம்! தமிழர்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியும், அளித்த கடும்உழைப்பும்தான், காடு கனியும் நிலையைத்தந்தது என்று விளக்கமளித்தனர்; வியப்புற்றேன்!!

காடுகளை அழித்தும் களிறுகளை விரட்டியும், காட்டெருமைகளால் தாக்குண்டும் கடும் புலிகளுடன் போராடியும் தமிழர்கள் அமைத்துக்கொடுத்த இடங்களே இன்று 'கண்ணன் தேவன்' தேயிலைத் தோட்டங்கள், என்றனர்!

பாராட்டுவதா, பரிதாபப்படுவதா! அகமகிழ்வதா அனுதாபப்படுவதா!!—என்று தெரியாமல் திகைத்தேன்! தமிழர் பலரின் இன்னுயிரைக் குடித்துவிட்டுத்தான், தோட்டங்கள் துரைமார்கள் கொழுத்திடத்தக்க செல்வத்தைக் கொடுத்துள்ளன!! நான் சென்று அன்றிரவு தங்கி இருந்த இடத்துக்குப் பெயரே, ஆனைக்கல் என்றால், தம்பி! இடத்தின் முன்னாள் இயல்பு எவ்வண்ணம் இருந்திருக்கும் என்பதைப்புரிந்து கொள்ளலாமல்லவா—ஓரளவுக்கேனும். அன்றிரவு கூட்டம் முடிந்தது, 'ஆனைக்கல்' தோழர் லியான் அவர்களுடைய இல்லத்தில் அன்புவிருந்து உண்டான பிறகு, இரவு எட்டு மணிக்குக் 'கீழே' செல்ல விரும்பினேன்—தோழர் லியான், வேண்டாம் மூடுபனி பாதையைக் குறுக்கிடக்கூடும், அதுகூடப் பரவாயில்லை, வழிதவறி வரும் யானை குறுக்கிடும், பிறகு..... என்று பீதியுடன் கூறினார்—நான் தைரியமாக வாதாடிவிட்டு, பாதுகாப்பு உணர்ச்சியுடன் பயணத்தை 'ரத்து' செய்துவிட்டு, இரவுப் போதை, அங்கு கழித்துவிட்டு, விடிந்தபிறகுதான் பயணத்தைத் துவக்கினேன். ஆனால், தோழர் லியான் எதிர்பாராத வேறோர் ஆபத்து குறிக்கிட்டது—அது கூறுமுன், தம்பி, வேறுசில கூறிவிடுகிறேன்.

தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் எனும் தமிழர் பகுதிகளைத் தமிழகத்துடன் சேர்த்தாக வேண்டும் என்பதற்காக, எத்தகைய கஷ்ட நஷ்டமும் ஏற்கும் துணிவுகொண்ட உள்ளம் படைத்தவர்கள் நாஞ்சில் பகுதியில் நமது கழகத்தில் ஏராளமாக உள்ளனர் என்று மட்டுமே எண்ணிக் கொண்டிருந்தேன் — இப்போது இதற்கான ஆர்வம் கொண்ட தமிழர்கள் மலையில் மட்டுமல்ல, அதைத் தொட்டுக்கொண்டும், மிக நெருங்கிய தொடர்பு கொண்டும் உள்ள பெரியகுளம் தாலுக்கா முழுவதிலும், ஏராளமாக உள்ளனர் என்பதைத் தெரிந்து கொண்டேன். மலை அடிவாரமாக உள்ள கூடலூர், ஓர் நல்ல பாசறை. கம்பம் — தேவாரம் — கோம்பை — போடி—பெரியகுளம் — இங்கெல்லாம், நமது கழகம் மிக வலிவும் பொலிவும் கொண்டதாக இருக்கிறது. பொதுவாகவே பெரியகுளம் வட்டாரத்தினர், மலை மீதுள்ள ஏலத் தோட்டங்களின் உரிமையாளர்கள் —அந்த வட்டாரத்து வாழ்க்கைத் தரமே, மலையில் அவர்களுக்கு உள்ள தொடர்பைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இந்தப் பகுதியில் உள்ள பெரும் செல்வர்கள், காமராஜர் தமது பாதுகாப்பாளர் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள்! ஆனால், தேவிகுளம் பீர்மேடு பகுதிகளுக்கான கிளர்ச்சிக்கு வீரர்கள் – தியாகிகள் – அஞ்சா நெஞ்சுடன் அறப்போரில் ஈடுபடவல்லோர் தேவைப்படும்போது, நமது கழகம்தான், பணியாற்ற முடியும். வாய்ச்சொல் அருளவும், வழிவகை கூறவும் தலைவர்கள் பிற முகாம்களில் கிடைக்கக்கூடும். ஆனால், காரியமாற்றவும் கடும் கிளர்ச்சிகளில் ஈடுபடவும், கழகம்தான் முன்வரவேண்டிய வாய்ப்புப் பெற்றிருக்கிறது. மலைமீதுள்ள தமிழ்த் தோழர்களிடம் நாம் பெறக்கூடிய ஆதரவினைவிட, அளவிலும் வகையிலும் அதிகமான அளவு பெரியகுளம் வட்டாரத்திலே திரட்ட இயலும்—திரட்டிடவேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

ஒன்றுமட்டும் முன்கூட்டியே தெரிந்துகொள்வது, களம் அமைக்கப் பெரிதும் உதவக்கூடியது

"பேச்சு சுதந்திரம் வேண்டும் என்று முழக்கமிட்டுத்தான் ஒவ்வொரு சர்வாதிகாரியும், அதிகார உச்சியில் அமர்கிறான். அப்படி அமர்ந்ததுமோ தன்னைத் தவிர மற்றவர்களுக்கெல்லாம் அந்த உரிமையை மறுக்கிறான்,"

ஹெர்பர்ட் ஹூவர்

என்று எண்ணுகிறேன் — திருவிதாங்கூர் சர்க்கார் எளிதில், இடமளிக்காது இணங்காது!— தமிழரின் உரிமையைப் பறிப்பது அறமாகாது என்று கருதும் நேர்மை மலையாளநாட்டுத் தலைவர்களில் ஒருவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை—தமிழர்களைக் கூலிகள்—பிழைக்கவந்தவர்கள் — அன்னியர்கள் — என்று மலையாளிகள் கருதும்படி—(ஏசும்படி மட்டுமல்ல) பலமான பிரச்சாரம் நடைபெற்றிருப்பதுடன், விளைவுபற்றி எண்ணிப்பாராமலேயே விரத்தை விம்பாக்கிப் பேசிடும் வித்தகர் சிலரால், தமிழர்—மலையாளி மனமாச்சரியம், கொழுந்துவிட்டெரியும் நிலையும் இருக்கிறது—இதனை மறைத்தும் பயனில்லை—குறைத்து மதிப்பிடுவதும் தவறு — இந்த மாச்சரியம் மேலும் வளரும் தன்மையில் கிளர்ச்சிகள் உருவாக்கப்படுவதும், அங்கு உள்ள தமிழர்களுக்குப் பேராபத்தாக முடியும். மற்றுமொன்று விளக்கமாக்கப்படவேண்டும்—வண்டிப் பெரியாறு கூட்டத்தில் நான் இதனை வலியுறுத்திக் கூறினேன்—மத்ய சர்க்கார் பிரித்தாளும் சூழ்ச்சியைத் திறம்பட நடத்தவே திட்டமிட்டுவிட்டிருக்கிறது. எனவே, தமிழர்—மலையாளி மனமாச்சரியம் வளருவதை, டில்லி புன்னகையுடன் பார்த்துக்கொண்டு, 'மோதுதல்' ஏற்பட்டால் போலீஸ்! போலீஸ்! என்று கொக்கரித்து அடக்குமுறையை அவிழ்த்துவிடவே செய்யும்.

தமிழர், தெலுங்கர், மலையாளி, கன்னடியர்—என்போர் திராவிடர் என்ற இன உணர்வுகொண்டு, கூட்டாட்சிக்கான வேட்கை கொள்வர், அது, நமது ஏகாதிபத்தியத் திட்டத்தைத் தகர்த்துவிடும் என்ற கிலி டில்லிக்கு ஓரளவுக்கு ஏற்பட்ட சமயமாக இந்த 'மொழி வழி அரசு'ப் பிரச்சினை கிளம்பிற்று —இதிலே, தமிழரும் மலையாளியும், மனமாச்சரியம் கொள்வதும், தமிழரும் ஆந்திரரும் தகராறு மூட்டிக்கொள்வதும், தமிழர் கருநாடகத்தார் மனக்கசப்புக் கொள்வதும், டில்லிக்கு, மிகமிக மகிழ்ச்சி யூட்டுகிறது. டில்லியின் எதேச்சாதிகாரம், மார்வாடி ஆதிக்கம், நேரு ஏகாதிபத்தியம், வடநாட்டுச் சுரண்டல், எனும் 'பேச்சு' ஓரளவுக்கு நிறுத்தப்பட்டு, தேவிகுளம் யாருக்குச் சொந்தம், திருப்பதியை ஆந்திரர்கொள்வதா, பெல்லாரியை இழப்பதா, காசர்கோடு களவாடப்படுவது அக்ரமம், என்று இத்தகைய பிரச்சினைகள் முன்னணிக்கு வந்து சேரும், என்பதற்கான அறிகுறி கண்டு, டில்லி களிப்படைகிறது! 'மொழிவழி அரசு' நேர்மையுடனும் உரிமை முறைப்படியும் அமைவதற்கான 'அமளி'யை மூட்டிவிட்டுவிட்டால், இதற்காக இவர்கள் ஒருவருடன் ஒருவர் அடித்துக்கொண்டு கிடப்பர்—நாம் தப்பித்துக்கொள்ளலாம் என்பதே டில்லியின் திட்டம். பிரித்தாளும் சூழ்ச்சியைப் பிரிட்டிஷாரிடமிருந்து வடநாட்டுத் தலைவர்கள் நன்றாகக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

தேவிகுளம் பீர்மேடு பிரச்சினைக்கான கிளர்ச்சியின்போது, மக்கள் மன்றத்திலே, வடநாட்டுச் சர்க்காரின் இந்தப் பிரித்தாளும் சூது பற்றி எடுத்துரைத்து, உண்மைப் பகைவன் யார் என்பதைச் சுட்டிக்காட்டும் வேலையை, பிறகட்சிகள் செய்யும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை! நேருவின் நெரித்த புருவத்தைக் காணவும் அஞ்சுகிறார்கள் அந்த வீரர்கள்! அந்தக் காரியத்தைச் செய்யும் 'தனி உரிமை'யை நாம்தான் நிறைவேற்றித் தீர வேண்டும் என்று எண்ணுகிறேன். இதற்கான ஆர்வம், இந்தப் பகுதியில் மிக வளமாக இருக்கிறது.

நல்லார்வம் கொண்ட தோழன் ஒருவன்தான், எங்களை மலைமீது மோடார் வானில் கொண்டு சென்றான்—ஆர்வம் அவனைச் சளசளவென்று பேசச் செய்தது கலகலவென்று சிரிக்கவைத்தது, படபடவென்று நடந்துகொள்ளச் செய்தது. வண்டியோ 'லொட லொட'!! அதை அவன் பொருட்படுத்தியதாகவும் தெரியக் காணோம், நாங்கள் அதனைக் கவனிக்கவும் முடியாத நிலையில், காட்சியின் கவர்ச்சியிலே சிக்குண்டு கிடந்தோம். மலையினின்றும் கீழே வண்டி வருகிறது—உதைத்துக் கொள்கிறது, உறுமுகிறது — உருளைகளிலே ஏதோ சிக்கிக்கொண்டுவிட்டது போன்ற சத்தம் கேட்கிறது—ஆர்வம் நிரம்பிய அந்தத் தோழனே, எவ்வளவு பழுதுபட்ட வண்டியும் தன் கைவண்ணத்திறனால் செலுத்த முடியும் என்பதை எடுத்துக்காட்டும் ஒரே நோக்கம் கொண்டவனாகக் காணப்பட்டான், என் செய்வது?

பழுதுபட்டிருக்கிறதோ? என்று கேட்கிறார் தோழர் லியான், ஏதோ ஓர் மோட்டார் உறுப்பின் பெயரைக் குறிப்பிட்டு—அவன் அலட்சியமாகக் கூறுகிறான், இதுதானா! பிரேக்கேகூடத்தான் சரியாக இல்லை! என்று.

வண்டி உருண்டோடி வருகிறது —கீழே அல்லவா இறங்குகிறோம். இரண்டு வண்டிகள் ஒருசேரச் செல்லமுடியாத பாதை; வளைவுகள், ஒருபுறம் மலைகள், மறுபுறம் பெரும் பெரும் பள்ளங்கள்; கீழே இன்னும் இறங்க வேண்டியது 1500 அடி இருக்கும். திடீரென்று மோடார் உருளுவது, தேய்ந்தும் ஊர்ந்தும் செல்வதுபோலாயிற்று. பாதையிலே வண்டி எக்காரணத்தாலோ ஒட்டிக்கொண்டுவிட்டது போன்ற ஒருநிலை. ஒரு திருப்பம் வந்தது, 'பன்ச்சர்' ஆகிவிட்டதுபோலிருக்கிறது என்று கூறி வண்டியை நிறுத்தச் சொல்கிறேன், வண்டி தானாகவே நின்றுவிட்டது; எந்தச் சக்கரத்திலே 'பன்ச்சர்' ஆகிவிட்டது என்று பார்க்கக் கீழே இறங்கினேன் — உடனிருந்த தோழர்கள் பொன்னம்பலனாரும் மதியழகனும் இறங்கினர். நான்கு சக்கரங்களில் எது கெட்டுக் கிடக்கிறது என்று பார்க்கிறோம், வண்டியில் மூன்று சக்கரங்கள்மட்டுமே உள்ளன! பின் சக்கரங்களிலே ஒன்று காணோம்! திகைத்துப் போய் நின்றோம், நீங்கள் என்னை விட்டுவிட்டாலும் நான் உங்களிடம் வந்து சேராமல் இருப்பேனா என்று கூறுவதுபோல அந்தச் சக்கரம் பின்புறம் உருண்டு வந்துகொண்டிருந்தது. 'அச்சு' முறிந்துவிட்டது; 1500 அடி பள்ளம் கீழே. எதிரே திருப்பம்; பாதையோ வளைவு. வண்டியிலேயோ மூன்று சக்கரங்கள்!

அவ்வழி வந்தவர்கள் அனைவரும் இக்காட்சி கண்டு திடுக்கிட்டுப் போயினர். அவர்கள் பேசிக்கொண்டதைக் கேட்ட பிறகுதான், எவ்வளவு ஆபத்தான நிலை ஏற்பட்டது என்பதும், எவ்வளவு எதிர்பாராதவிதத்தில் தப்பித்துக்கொண்டோம் என்பதும் எங்களுக்கே தெரிந்தது.

தம்பி! நமது இயக்கத் தோழர்களிடம் நல்லார்வம் நிரம்ப இருக்கிறது—அதுபோலவே, நம்மிடம் உள்ள சாதனங்கள் பழுதுபட்ட நிலையில் உள்ளன — ஆர்வம்தான் துணை நிற்கிறது—நாலுக்கு மூன்று

என்றாகும்போதும், எப்படியோ நமது பயணம் நடந்தேறிவிடுகிறது. ஆனால், எத்தனை நாளைக்கு இது போல, என்று எண்ணாமலிருக்க முடியவில்லை. எனவே, நாம் நமது ஆர்வம் திறமை ஆகியவற்றினைச் செம்மையாக வைத்துக்கொள்வது போலவே, 'சாதனங்களை'யும் செம்மையாக்கிக்கொள்ள வேண்டும்.

திருவிதாங்கூர் சர்க்காரிடமிருந்து, தமிழ்ப் பகுதிகளைப் பெற எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சி இருக்கிறதே, அது ஏறத்தாழ நான் குறிப்பிட்ட இந்தப் 'பயணம்' போன்றது. முதலமைச்சர் காமராஜர் எமக்கு வண்டி ஓட்டிக்கொண்டு வந்த நண்பர் போலவே, அச்சு முறிந்தாலும் அதையும் கவனிக்காமல் இருந்திடும் அலட்சியப் போக்கிலே தான் நடந்துகொள்கிறார். நிபுணர்களைச் சிந்திக்கவைக்கும் பிரச்சினையாக இருக்கட்டும், மக்களின் மனதிலே குழப்பமும் கொந்தளிப்பும் மூட்டிடத்தக்க பிரச்சினையாக இருக்கட்டும், எவ்வளவு இன்றியமையாத பிரச்சினையானாலும், இடர்மிகுந்ததானாலும், இவருக்குமட்டும் சர்வ சாதாரணமாகத்தான் எந்தப் பிரச்சினையும் காணப்படுகிறது. எதுபற்றியும் ஒரு அக்கரையற்ற தன்மை, அலட்சியப் போக்குக் காண்கிறோம்.

**ஆகட்டும் பார்ப்போம், அதற்கென்ன அவசரம், அது என்ன முக்கியம், அது தானா வேலை, ஏன் இந்தப் பிரச்சினை, என்ற பேச்சிலேயே மன்னராக இருக்கிறார்!**

பிரச்சினைகளின் சிக்கல் புரியாததால் இவ்விதம் இருக்கிறாரா, புரிந்து, நம்மால் என்னசெய்யமுடியும் என்று திகைத்துப்போய், அந்தத் திகைப்பை மறைத்துக்கொள்ள இவ்விதம் பேசித் தொலைக்கிறாரா, என்பதும் புரியவில்லை!

தமிழ்நாடு என்று சென்னை இராஜ்யத்துக்குப் பெயர் இருக்கவேண்டும் என்று, நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் கூறுகின்றன — அவருடைய 'சகாக்களே' கூடத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கூறுகிறார்கள்—ஒரு துளி பரபரப்பு, சிறிதளவு மன எழுச்சி, கொஞ்சம் ஆர்வம் தெரிகிறதா? இல்லை! இல்லை! தமிழ்நாடு என்று பெயரா? ஏனாம்? அதற்கென்ன இப்போது அவசரம்? தெலுங்கரும் மலையாளிகளும், சென்னை இராஜ்யத்தை தமிழ்நாடு என்றுதான் அழைப்பார்கள்! நாமே நம்மைத் தமிழ்நாடு என்று அழைத்துக் கொள்ளவேண்டுமா!—என்று கேட்கிறார்.

பெரியார் 'தமிழ்நாடு' என்ற பெயர் பெறக்கூட முடியாவிட்டால், நாம் எதற்குத்தான் யோக்கியதை பெற்றவர்கள் என்று இடித்துக் கேட்கிறார், காமராஜர் இளிக்கிறாரே தவிர, இதை ஒரு பிரச்சினையாகவே கொள்ள மறுக்கிறார்.

குடகு தனி அமைப்பாக இருத்தல் வேண்டும்—அதைக் கருநாடகத்துடன் இணைத்தல் கூடாது என்று கிளர்ச்சி இருக்கிறது—ஒரு இராஜ்யமுதலமைச்சராயிற்றே என்பதால் இவரிடம் இதுபற்றி முறையிடுகிறார்கள், என்ன பதிலளிக்கிறார் தெரியுமோ இந்த நிபுணர்! குடகு தனி அமைப்பாக இருந்தால் என்ன, கருநாடகத்தின் நிர்வாகத்தில் இருந்தால் என்ன, இதற்கு ஏனய்யா தகராறு, இது ஒரு பிரமாதமான பிரச்சினையா! என்று கேட்கிறார்.

தேவிகுளம், பீர்மேடு ஆகியவற்றினைத் தமிழர்கள் பெறப்பாடு படுவீர்களா! என்று கேட்கிறார்கள்—பதில் என்ன தெரியுமோ? அதற்கான முயற்சியைச் சென்னை சர்க்கார் கவனித்துக்கொள்கிறது—அதுபற்றி நீங்கள் யாரும் வீணாக மனதை அலட்டிக்கொள்ள வேண்டாம்—முயற்சிப்போம். பெற முடியாதுபோனாலும் குடி முழுகிப் போகாது—நாமெல்லாம் 'இந்தியர்'கள்தானே, எந்த இடம் யாரிடத்தில் இருந்தால் என்ன!

மைசூர் மைசூர் மக்களுக்கே, என்கிறார்களே அது அவருக்குப் பிடிக்கவில்லையாம்!

வேங்கடம் முதல் குமரி வரை என்று தமிழர் பேசுகின்றனரே அது அவருக்கு 'அற்ப'விஷயமாகத் தோன்றுகிறதாம்!

சென்னை இராஜ்யம் என்ற பெயர் கூடாது, தமிழ்நாடு என்றுதான் இருத்தல்வேண்டும் என்கிற விஷயம், சின்ன விஷயமாகிவிடுகிறது இந்தப் பெரியவருக்கு!

வடநாடு வளருகிறது தெற்கு தேய்கிறதே என்று பொருளாதார நிபுணர்களெல்லாம்கூடக் கலக்கமுற்றுப் பேசுகிறார்களல்லவா, அந்தப் பிரச்சினையும் இவருக்கு, தேவையற்ற பிரச்சினையாகத் தெரிகிறது! தொழில்கள் வடக்கே இருந்தால் என்ன, தெற்கே இருந்தால் என்ன, எல்லாம் இந்தியாவில்தானே இருக்கிறது என்று மிகமிக அலட்சியமாகப் பேசிவிடுகிறார்.

அவருக்குப் பாவம், இத்தகைய பிரச்சினைகளில் உண்மையிலேயே பழக்கம் இல்லை. எனவே அக்கரை எழக் காரணம் இல்லை! இவை போன்ற பிரச்சினைகளைப்பற்றிக் கவனித்தாகவேண்டிய இடத்திலே அவர் அமர்ந்துவிட்டதால், இவரிடம் இவைகளுக்கெல்லாம் விளக்கம், பரிகாரம், கேட்கிறார்கள். அவருக்கோ ஆச்சரியமாகவும் இருக்கிறது அருவருப்பாகவும்

## வாழ்த்துகிறோம்

31-10-55 மாலை 4-30 மணிக்கு விழுப்புரம் 'குமரன் டாக்கீஸில்', ஒத்திவாக்கம் ஸ்டேஷன் மாஸ்டரும் எஸ். ஆர். எம். யு. செங்கற்பட்டு கிளையின் தலைவருமான தோழர் கே. இராமச்சந்திரனுக்கும்—சென்னை ஆசிரியை, தோழியர் எஸ். அநுசூயாவுக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் அண்ணாதுரை தலைமையில், நடைபெற்றது. திருமண நிகழ்ச்சி, மாலை மாற்றிக் கொள்ளும் அளவிலும், மணமக்கள் உறுதி மொழிகளைப் படித்ததோடும் முடிவு பெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் கே. மதியழகன், அ. பொன்னம்பலனார், ஆகியோர் பேசினர். தென் இந்திய ரயில்வே மென் யூனியன் தலைவர் தோழர் சீ. இராகவானந்தம் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார். மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துக்களும், பரிசுகளும் வந்தன. தொழிற் சங்கத் தோழர்கள் ஏராளமாக வந்திருந்து திருமணத்தைச் சிறப்பித்தார்கள். மணமகன் கேரளத்தைச் சேர்ந்தவர், மணமகள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். புதுமணம் கொண்ட இரு சீர்திருத்தத் தம்பதிகளையும் வாழ்த்துகிறோம். திருமணத்துக்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்த எஸ். ஆர். எம். யு. தோழர்களையும் பாராட்டுகிறோம்.

இருக்கிறது. அவர் கடந்த முப்பதாண்டுகளாக ஒரே ஒரு பிரச்சினையைத்தான் அறிந்திருக்கிறார், இன்றும் அவருக்கு அந்த ஒரே பிரச்சினையிலேதான் அக்கரை இருக்கிறது—மாடு! மாடு!! மாடு!!'

சிங்கம் — ஒட்டகம்—சைகிள் — ஆலமரம்—குடிசை—கதிர் அரிவாள் —தாமரைப்பூ— இவைகளெல்லாம் தோற்கவேண்டும், 'மாடு' வெற்றிபெற வேண்டும்-இது ஒன்றுதான் அவருடைய பிரச்சினை — இதிலேதான் அவருக்கு அக்கரை—இதற்குத் தகுந்த திறமையையும் வசதிகளையும் பெற்றுக்கொள்வதிலேதான் அவர் காலங்கழிக்கிறார்— இந்த நோக்கம் வெற்றிபெறுவதற்கான தொடர்புகள் — துணை — தோழமை—கூட்டு— இவைகளிலேதான் அவர் அபாரமான அறிவாற்றலைக் காட்டுகிறார்—இதுதானு ஒரு இராஜ்ய முதலமைச்சருக்கு வேலை என்று கேட்டவரிடம், இதைவிட வேறு வேலை என்ன இருக்கிறது என்று அவர் கேட்கவே செய்தாராம்!

ஒவ்வோர் 'ராஜ்ய' முதல்வர்களும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், எமக்கு இந்தத் திட்டம் வேண்டும், இவ்வளவு தொகை வேண்டும்—இராஜ்யங்கள் புதிதாக அமையும்போது இன்னின்ன பகுதிகள்வேண்டும், இன்னின்ன உரிமைகள் வேண்டும் என்று கேட்டும், கிளர்ச்சி நடத்தியும் வருகிற நேரமாகப் பார்த்து, இவர் செய்தது என்ன? ஒட்டகத்தை நுழைய விடாதீர்கள், சிங்கத்தை விரட்டுங்கள்; அருணசலம் நல்லவர், ஆண்டியப்பன் வேண்டியவர், மாடு நல்ல பிராணி, மறவாது 'சூடு' போடுங்கள் என்று இந்த 'வேலை'யைத்தான் செய்துகொண்டிருந்தார். இதுதான் இவருக்கு உகந்த வேலை, இதற்குமட்டுமே இவர் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கிறார். எனவே நேருவாகப் பார்த்து, நியாயத்துக்குக் கட்டுப்பட்டு, தமிழரின் உரிமைகளைத் தந்தால் உண்டே தவிர, தம்பி! காமராஜர் தமது திறமையினல், தமிழரின் உரிமையைப் பெற்றுத் தருவார், என்று என்னுல் துளியும் நம்ப முடியவில்லை. கேட்பார்—புள்ளி விவரம் தரபபடும் அதைத் தபாலில் அனுப்புவார் — டில்லி இணங்க மறுத்தால், சரி, போனுல் போகட்டும் தேவிகுளம் இங்கு இருந்தால் என்ன, அங்கு இருந்தால் என்ன என்று கூறிவிடுவாரே தவிர, தமிழர் உரிமை, தமிழகம், இவைபற்றித் துளியும் அக்கரை காட்டமாட்டார். நாம்தான் அவரைப் பச்சைத் தமிழர் என்று பாராட்டுகிறோம்—அவர், மொழி, இனம், நாட்டு உணர்ச்சிகளுக்குத் தமது உள்ளத்தில் இடமளித்துப் பழக்கப்பட்டவரே அல்ல—அவருக்குச் சுறுசுறுப்பும், தெம்பும், தரக்கூடிய ஒரே பிரச்சினை. 'ஓட்டு வேட்டை' ஒன்றுதான். வேறு எதிலும் அவருக்கு அக்கரையும் கிடையாது, பயிற்சியும் ஏற்பட்டதில்லை—வேறு எல்லாப் பிரச்சினைகளும் அவருக்குச் 'சின்ன விஷயம்' —ஆகட்டும் பார்க்கலாம்—அதனுல் என்ன, என்பவைகளே!!

அன்பன்,

**அண்ணுத்துரை.**

---

3–ம் பக்க தொடர்ச்சி

இவ்வளவு ஆடம்பரமா! போலீசா! பணச்செலவா!! கேட்கத் தவறியதில்லை—கவர்னர் என்ருல் அவருக்கேன் இவ்வளவு ஆடம்பரச் செலவுகள்? தனி மனிதனுக்கு இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டங்களா?—கர்ஜனை செய்யத் தவறியது கிடையாது. ஆனுல், இப்போது! அந்தஸ்து எனும் பெயரால்—அந்த அந்தஸ்தை நிலை நாட்டிக்கொள்ளும் ஆசையால், அடடா, எவ்வளவு பணம் செலவழிகிறது — நேருவின் சுற்றுப்பயணம், மாகாணத்துப் பொக்கிஷத்தில் எவ்வளவு தொகையை வாரிவிடுகிறது! எத்தனை போலீஸ்பாரா! என்னென்ன அமர்க்களங்கள்! வெளிநாட்டுத் தூதுவர்கள் எனும் பெயரால், விரயமாகும் வழிகள்தான் எத்தனை யெத்தனை — குடியரசுத் தலைவர் இராஜேந்திர பிரசாத்தின் அரண்மனையில் 'யானை' ஒன்று கட்டி, வளர்க்கப்படுகிறதாம்—அதற்காகிற செலவு என்ன! ஏனிப்படி ஒரு அநியாயச் செலவு!! என்று கேட்டார்கள் நேரு பண்டிதரை, பார்லிமெண்டில் — அவரும் கோபத்துடனேயே பதில் சொன்னுர், "ஒரு குடியரசுத் தலைவர் என்ருல், அவருடைய அந்தஸ்துக்கு என்று சில முறைகள் இருக்கத்தான் வேண்டும். பணச் செலவைக் கருதி, அந்த இடத்துக்குள்ள பெருமையைக் குறைத்து விடக்கூடாது. இதுபோல, குறைகள் கூறப்படுவதை நான் கண்டிக்கிறேன்", காரசாரமாகவே, கண்டித்தார்! அந்தஸ்துக்காக பணம் செலவழிப்பது அவசியமே, என்ருர்!

'அந்தஸ்து' என்பதை ஒருபோது கண்டித்தவர்கள், இன்று அதே 'அந்தஸ்து'க்காகப் பணத்தை நாசம் செய்கிருர்கள்.

'அந்தஸ்து' எந்தெந்த வகையில் உயர வேண்டுமோ, அதற்கான வழிகளெதுவும் தெரியவில்லை! பாலைவனமாகத் தெரிகிறது எதிர்காலம்! ஆனுல் அமைச்சர் தெரிவிக்கிருர்; இப்போது அந்தஸ்து உயர்ந்திருக்கிறதாம் — அதனுல், கடன் வாங்கியாவது கடன் தரவேண்டுமாம்.

வீடு, கண்ணீர்க் குளமாகக் கிடக்கும்போது, முனியப்பனுக்கும் கந்தப்பனுக்கும் கடன் வாங்கிக் கொடுப்பவனை, ஊதாரி என்று சொல்லி, உபதேசம் செய்ய வருவார்கள், நல்லவர்கள். அந்த நல்லவர்களில் பலருக்கு, நாடாளும் சர்க்காரின் இந்தப்போக்கு இன்னும் தென்படவில்லை! சொன்னுலும், சீறுகிருர்கள். மறந்துவிட வேண்டாம், அந்தஸ்தைக் காட்டி பணம் தரவேண்டியது அவசியம் என்கிருரே நிதியமைச்சர்; அந்த அந்தஸ்தைக் காட்டியல்ல அமெரிக்காவிடம், அவர்கள் மடிப்பிச்சை ஏந்துவது! இந்தியாவைக் காட்டி—இமயமலை முதல் குமரி வரை உள்ள நிலப்பரப்பை அடமானம் வைத்துத்தான் கடன் வாங்குகிருர்கள்! வாங்கியும், இப்படி வீணுக்குகிருர்கள்!!

★

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

நிர்வாகி

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணுத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.